Tamil Heritage Foundation International Digital Library EBook collection

நாடார் குல மித்திரன்.

1927-ஹூ
டிசம்பர் மீ 19 உ

# ஸத்திய தரிசனம்.

## மகாத்மா காந்தி ஜீவிய சரித்திரம்.

ாகம் 4. அத்தியாயம் 28.

### கஸ்தூரிபாயின் வைராக்கியம்.

எனது மனைவி, தனது வாழ் நாளில் ன்று தடவை மிகுந்த வியாதியால் ர விருந்த மரணத்தினின்றும் தப்பி ள். வீட்டு மருந்துகளாலேயே யாதி குணப்படுத்தப் பட்டது. ந்த மூன்று தடவைகளில் முதல் டவை சத்தியாக்கிரஹம் நடந்து காண்டோ அல்லது ஆரம்பிக்கும் மயமாகவோ இருந்தது. அடிக்கடி த்தம் வெளிப்பட்டுக் கொண்டிருந் து. எனது வைத்திய நண்பர் ஒரு ர் ரண சிகிச்சை செய்யும்படி சொன் ர். சிறிது நேரம் ஆலோசித்துப் றகு அதற்கு ஒத்துக் கொண்டாள். வள் சதைப் பற்றில்லாமல் மிகவும் மலிந்து போயிருந்ததால் அந்த வைத் யர் மயக்க மருந்து கொடுக்காமலே ண சிகிச்சை செய்ய வேண்டி யிருந் து. அது வெற்றிகரமாகவே முடிந்த போதிலும் அவள் மிகுந்த வேதனை னுபவிக்க வேண்டி யிருந்தது.

எப்படியும் ஆச்சரியப்படத்தக்க ரத்துடன் அவள் பொறுத்துக் காண்டாள். அவளுக்கு சிகிச்சை செய்த வைத்தியரும் அவரது மனைவி யும் மிகுந்த கவனத்துடன் பார்த்து க்தார்கள். இது டர்பனில் நடந்தது. ான் ஜோஹன்ஸ் பர்க்குக்குப் போகலா மென்றும் வியாதியஸ்தரைப்பற்றிய கவலையே எனக்கு வேண்டா மென்றும் வைத்தியர் அனுமதி கொடுத்தனுப் பினர்.

ஆனாலும், சில தினங்களில், கஸ்தூரி பாய் மிகவும் சேவலமாக இருப்பதாக வும், படுக்கையில் எழுந்து உட்காரு வதற்குக் கூட சக்தி யில்லை யென்றும், ஒரு தடவை பிரக்ஞையே யற்றுப் போனதாகவும் எனக்கு ஒரு கடிதம் வந்தது. என்னுடைய உத்தரவில்லா மல் அவளுக்குச் சாராயங்களாவது, மாமிசமாவது கொடுக்கக் கூடா தென்று அந்த வைத்தியருக்குத் தெரியும். ஆகையால் அவளுக்கு மாமிச சத்துக் கொடுக்க அனுமதிக்கும் படி ஜோஹன்ஸ் பர்க்கிலுள்ள என்னி டம் டெலிபோனில் கேட்டார். நான், அவரது கோரிக்கைக்கு அனுமதி யளிக்க முடியா தென்றும், இதைப் பற்றித் தன்னுடைய அபிப்பிராயத்தை அறிவிக்கக் கூடிய நிலைமையில் அந்த அம்மாள் இருந்தால் அவளையே கேட் டுக் கொள்ளும்படியும், தனது இஷ்டம் போல் அந்த அம்மாள் செய்வதற்கு உரிமை யுண்டென்றும் நான் பதில் சொன்னேன். "ஆனால் இந்த விஷயத் தில் நான் வியாதியஸ்தரின் அபிப்பிரா யத்தைக் கேட்க மாட்டேன். தாங் களை நேரில் வர வேண்டும். என்ன பத்தியம் கொடுப்ப தென்னும் விஷயத் தில் நீங்கள் என்னை என் இஷ்டம் போல் விடா விட்டால் தங்களது மனை வியின் உயிருக்கு நான் ஜவாப்தாரியாக மாட்டேன்" என்று அவர் பதில் சொன்னார்.

அன்றே ரயிலில் புறப்பட்டு டர்ப னுக்குப் போய் வைத்தியரைச் சந்தித் தேன். "நான் தங்களிடம் பேசுவதற்கு முன்னாடியே தங்களது மனைவிக்கு நான் மாமிச சத்துக் கொடுத்து விட் டேன்" என்று அந்த வைத்தியர் மிகவும் அமைதியாக சமாச்சாரத்தை வெளியிட்டார்.

"வைத்தியரே! இது பெரிய மோ சம்" என்று சொன்னேன்.

"ஒரு வியாதியஸ்தருக்குச் மருந்து கொடுப்பதிலாவது பத்தியம் விதிப்பதி லாவது மோசம் என்று ஒன்றுமே கிடையாது. வியாதியஸ்தர்களைக் காப் பாற்றக் கூடுமானால் அவர்களையோ அல்லது அவர்களது உறவினர்களையோ ஏமாற்றுவது ஒரு பெரிய யோக்கியதை யென்று வைத்தியர்களாகிய நாங்கள் கருதுகிறோம்" என்று மிகவும் நிதான மாகப் பதில் உரைத்தார்.

நான் மிகவும் வருந்தினேன். ஆனால் சும்மா விருந்தேன். அந்த வைத்தியர் நல்லவர்; எனக்கும் ஏற்கனவே நண் பர். அவருக்கும் அவரது மனைவி யாருக்கும் நான் மிகவும் கடமைப் பட்டவன்; ஆனால் இந்த வைத்திய நீதிகளை நான் ஏற்றுக் கொள்ளத் தயாரா யில்லை.

"வைத்தியரே! இப்பொழுது நீங்கள் என்ன செய்ய வேண்டு மென்கிறீர்கள். அவள் இறந்து போவதா யிருந்தாலும் அவள் தானாக இஷ்டப்பட்டா லல்லது அவளுக்கு எந்த மாமிசமும் கொடுக்க நான் ஒத்துக் கொள்ள மாட்டேன்" என்றேன்.

"உங்கள் வேதாந்தம் உங்களுக்கு. தங்களது மனைவியார் என்னிடம் சிகிச்சை பெறும் வரை நான் இஷ்டப் படுகிற எதையும் கொடுக்கும் உரிமை எனக்கு இருக்க வேண்டும். தங்களுக்கு அது பிடிக்கா விட்டால், அவரை இங் கிருந்து அழைத்துக் கொண்டு போகும் படி மிகுந்த வருத்தத்துடன் நான் தங்களைக் கேட்டுக் கொள்ள வேண்டி யிருக்கிறது. என் வீட்டில் அந்த அம்மாள் இறப்பதை நான் பார்த்துக் கொண்டிருக்க முடியாது" என்றார்.

"நான் அவளை உடனே வேறிடத் துக்குக் கொண்டு போக வேண்டு மென்றா சொல்லுகிறீர்கள்?"

"அந்த அம்மாளை அப்புறப்படுத்தும் படி நான் எப்பொழுது தங்களிடம் சொன்னேன்? நான் விரும்புவதெல் லாம், என்னை என் னிஷ்டம்போல் விட்டு விட வேண்டு மென்பதுதான். அப்படித் தாங்கள் விட்டு விட்டால் நானும் என்னுடைய மனைவியுமாக அந்த அம்மாளுக்கு வேண்டியதெல்லாம் செய்கிறோம். தங்களுக்கு அவர்களைப் பற்றிய கவலையே வேண்டியதில்லை. ஆனால் இந்த இலேசான விஷயத்தைத் தாங்கள் அறிந்து கொள்ளா விட்டால் தங்களது மனைவியை என் வீட்டி லிருந்து அப்புறப் படுத்தும்படி நான் தங்களைக் கேட்கும்படி என்னைக் கட்டாயப் படுத்துபவ ராவீர்கள்" என்றார்.

என் பிள்ளைகளில் ஒருவர் என்னு டன் கூட இருந்ததாக நினைக்கிறேன். அவரும் என்னுடன் முழுவதும் ஒத்துக் கொண்டு கஸ்தூரி பாய்க்கு மாமிச சத்துக் கொடுக்கக் கூடா தென்று சொன்னார். பிறகு, நான் என் மனைவி யிடம் பேசினேன். இது போன்ற விஷயங்களைக் குறித்து ஆலோசனை கேட்பதற்கு அவள் உண்மையிலேயே மிகவும் பலஹீனமாக விருந்தாள். ஆனால், நான் மிகுந்த வருத்தத்துடன் அவளிடம் கேட்டேன். எனக்கும் வைத்தியருக்கும் நடந்த சம்பாஷ ணையை அறிவித்தேன். "நான் மாமிசத் தைச் சாப்பிடமாட்டேன். உலகத்தில் மானிடராகப் பிறப்பது மிக அரிது. மிகவும் வெறுக்கத் தகுந்த இந்த வஸ் துக்களைத் தின்று எனது உடலை அசுத் தப்படுத்திக் கொள்வதைவிடத் தங்க ளது அடியிலேயே உயிரை விடுவேன்" என்று மிகவும் தீர்மானமாக பதில் சொன்னாள்.

நான் அவளுடன் வாதாடினேன். அவள் என்னைப் பின் பற்றி நடக்க வேண்டிய அவசியமில்லை யென்று சொன்னேன். மருந்தாக சாராயமும், மாமிசமும் சாப்பிட்டு வருகின்ற சில நண்பர்களையும், உறவினர்களையும் உதாரணமாகச் சுட்டிக் காட்டினேன். ஆனால் அவள் ஒரே பிடிவாதமாக விருந்தாள். "இல்லை, என்னை வேறி டத்துக்கு உடனே கொண்டு போகும் படி பிரார்த்திக்கிறேன்" என்றாள்.

நான் மிகவும் சந்தோஷமடைந்தேன். வருத்தத்துடனே தான் அவளது தீர் மானத்தை வைத்தியரிடம் அறிவித் தேன். அவர் "தாங்கள் என்ன ஒரு கன்னெஞ்சனாக இருக்கிறீர்கள். அந்த அம்மாளிருக்கும் ஸ்திதியில் இந்த விஷ யத்தை அவர்களிடம் சொல்லுவதற் குத் தாங்கள் வெட்கப் பட்டிருக்க வேண்டும். தங்களது மனைவியார் வேறிடத்துக்குக் கொண்டு போகப் படக் கூடிய நிலைமையில் இல்லை யென்று தங்களுக்குக் கூறுகிறேன். மிக மிக இலேசான அசைவையும் தாங்குவதற்கு அந்த அம்மாளால் முடியாது. அந்த அம்மாள் நடு வழி யிலிறந்து போனா லென்றாலும் நான் ஆச்சரியப் படமாட்டேன். தாங்கள் பிடிவாதம் செய்தால் தங்களது இஷ் டப்படியே செய்யவும். அவருக்கு மாமிச சத்துக் கொடுப்பதற்குத் தாங் கள் இசையாவிட்டால் அவரை என் வீட்டில் ஒரு நாள் கூட வைத்துக் கொள்ள நான் ஒப்புக் கொள்ள முடி யாது" என்று மிகுந்த கோபத்துடன் சொன்னார்.

ஆகையால் நாங்கள் உடனே அந்த வீட்டை விட்டுப் புறப்படத் தீர்மானித் தோம். மழை தூறிக் கொண்டிருந் தது. ஸ்டேஷன் சிறிது தூரத்திலிருந் தது. டர்பனிலிருந்து போனிக்சுக்கு ரெயிலில் சென்று அங்கிருந்து நாங்கள் குடியேறி யிருந்த இடத்துக்கு இரண் டரை மைல் தூரம் போக வேண்டி யிருந்தது. நான் ஒரு கஷ்டமான வேலையி லீடுபட வேண்டி யிருந்த தென்பதிற் சந்தேகமில்லை; ஆனால் நான் கடவுளை நம்பி வேலையைச் செய்ய ஆரம்பித்தேன். போனிக்ஸுக்கு முன்னதாக ஒரு ஆளை யனுப்பி ஸ்டே ஷனில் கஸ்தூரி பாயைச் சுமந்து செல்ல ஒரு கயிற்றுத் தொட்டிலும், ஆறு ஆட்களும், ஒரு சீசாவில் காய்ச் சின பாலும், மற்றொரு சீசாவில் வெந் நீரும் தயாராக ஆயுத்தம் செய்து வைக்கும்படி வெஸ்டுக்கு சமாச்சாரம் சொல்லி யனுப்பினேன். ஒரு கை வண்டியில் கஸ்தூரி பாயை அந்த அபாயமான நிலைமையில் படுக்க வைத்து அங்கிருந்து புறப்படுகின்ற முதல் ரெயிலுக்குப் பிரயாண மானேன்.

கஸ்தூரிபாய் நான் தேறுதல் மொழி களுரைக்கும்படி வைத்துக் கொள்ள வில்லை. அதற்கு மாறாக "எனக்கு ஒன்றும் சேராது. தாங்கள் கவலைப் பட வேண்டாம்" என்று என்னைத் தேற்றினாள்.

அனேக நாட்களாகப் போஷணை யற்றிருந்ததால் வெறும் எலும்பும் தோலுமாக விருந்தாள். அந்த ஸ்டே ஷனிலுள்ள மேடை மிகப் பெரியது. கை வண்டியை உள்ளே கொண்டு போக முடியா தாகையால் வண்டிக்குப் போகுமுன் கொஞ்ச தூரம் நடந்து போக வேண்டி யிருந்தது. ஆகையால் நான் அவளை எனது கைகளில் தூக்கிக் கொண்டு ரெயில் வண்டியில் விடுத் தேன். போனிக்ஸிலிருந்து நாங்கள் அவளைத் தொட்டிலில் கொண்டு போனோம். அங்கே ஜல வைத்திய சிகிச்சையால் சிறிது பலம் பெற்றாள்.

நாங்கள் போனிக்ஸுக்கு வந்த இரண்டு மூன்று தினங்களில் எங்களி டம் ஒரு சாமியார் வந்தார். வைத்தி யாது யோசனையை நாங்கள் எப்படிப் பிடிவாதத்துடன் ஏற்றுக் கொள்ள மறுத்து விட்டோ மென்பதைக் கேள்விப்பட்டு சுவாமியார் எங்களிடம் கொண்டிருந்த அன்பு காரணமாகத் தர்க்கம் செய்ய வந்தார். அந்த சுவாமி யார் வந்த பொழுது என்னுடைய இரண்டாவது, மூன்றாவது குமாரர் களாகிய மணிலாலும், ராம தாஸும் என்னுடனிருந்தார்களென்று நினைக் கிறேன்.

மனு ஸ்மிருதியிலிருந்து சில ஆதாரங் களை எடுத்துக் காட்டி, மாமிசம் புசிப் பது ஹிந்து மத விரோத மாகாதென்று சொன்னார். அவர் எனது மனைவியின் முன்னிலையில் இதைப் பற்றி விவாதிப் பது எனக்குப் பிடிக்க வில்லை. ஆனா லும் மரியாதைக்காக அவர் பேசுவ தைத் தடுக்காமலிருந்தேன். மனு ஸ்மிருதியிலுள்ள அந்த வாக்கியங்கள் எனக்குத் தெரியும்! நான் தெரிந்து கொள்வதற்கு அந்த வாக்கியங்கள் அவசியமில்லை. இந்த சுலோகங்களை சந்தேகமான ஆதாரங்களாகக் கருதக் கூடியவர்கள் அனேகர் இருக்கின்றார் கள் என்பது எனக்குத் தெரியும். அவைகள் நிச்சயமான ஆதாரங்களாக இருந்தாலுங் கூட, சாக உணவு சம்பந் தப்பட்ட மட்டில் மதப் புஸ்தகங்களி னின்றும் ஒரு தனியான அபிப்பிரா யத்தை நான் கொண்டிருக்கிறேன். கஸ்தூரிபாயின் உறுதி அசைக்க முடியாதது. சாஸ்திரங்களில் என்ன எழுதி யிருக்கிற தென்பதை அவள் கவனிக்கிற தில்லை. தனது முன்னோர் கள் வழக்க ஒழுக்கங்கள் மாத்திரமே அவளுக்குப் போதுமானதாக இருந் தது. அந்தக் குழந்தைகளோ தகப்ப னாது கொள்கைகளைக் கடைப்பிடிக்க உறுதி கொண்டார்கள்; ஆகையால் அவர்களும் சுவாமியாரது வாதத்தைப் பொருட் படுத்த வில்லை. ஆனால் கஸ்தூரிபாய் அந்த விவாதத்தை ஒரு முடிவுக்குக் கொண்டு வந்தாள். "ஸ்வா மிஜீ, தாங்கள் எவ்வளவு சொன்ன போதிலும்; மாமிச சத்தையுட் கொண்டு நான் சௌக்கிய மடைய விரும்ப வில்லை. அதிகமாக என்னைத் தொந் தரவு செய்யாமலிருக்கும்படி தங்களைப் பிரார்த்திக்கிறேன். அதைப் பற்றித் தாங்கள் என் கணவருடனும், பிள்ளை களுடனும் வேண்டுமானால் வாதம் செய்யுங்கள். என் மனது ஒரு தீர்மா னத்திலிருக்கிறது" என்றாள்.

---

# ஓர் ஹம்பக் வேலை.

## பத்திரிகைகள் எச்சரிக்கை கொள்ள வேண்டும்.

இவ்வம்பக் வேலையில், யாம் விழிப் புக் கொண்ட தினி மித்தம் அகப்பட்டுக் கொள்ளவில்லை. எமக்குப் போல் இன்னும் எத்தனை பத்திராசிரியர் களுக்கு மோச வலை வீசினரோ! யார் யார் அகப்பட்டுக்கொண்டனரோ! யார் யாரிடம் அடி பட்டோடினரோ! இவ்விஷமத்தனம் ஈரோட்டினின்றும் வெளிவந்திருக்கிறது. முழு விபரமும் அடியிற் காண்கலாம். ஊன்றிக் கவ னிக்க வேண்டுகிறோம்.

எமக்கு 23—11—27-ல் கிடைத்த கார்டு வருமாறு:—

என். சுந்தர நாடார்,
B. A. B. L.
வக்கீல் அண்டு எடிட்டர்,
ஈரோடு.

ஐயா,

தங்கள் பத்திரிகைக்கு சந்தாதார் சேர்க்கவும், மேட்டர் எழுதவும், ஈரோட்டிலிருந்து எஸ். ஆர். பழனிச் சாமி செட்டியார் அவர்களை நியமித்தி ருக்கிறேன். அவர் செந்தமிழில் மகா வித்வான். அவர் சந்தா சேர்ப்பதிலும், மேட்டர் அதாவது, மணித் திரள், மனன மாலை, குறிப்பு, விகடத் திரட்டு, இராஜீய விஷயம், கல்வி, மது விலக்கு, பெண்கள் பக்கம் முதலியன நன்கு செந்தமிழ் நடையில் எழுதுவார். எனக்கும் இன்னவை நன்கு தெரியும். இன்னவர் ரங்கூனில் முதன்மையான ஆசிரியர். ஆகையால் இன்னவர் பிரதி வாரம் 30 சந்தா சேர்த்தும், தங்கள் பத்திரிகை கணக்கில் 1 பேஜ் தகுதி யான மேட்டர் தயாரித்தும் பத்திரி கைக்கு இடையூறின்றி பிரதி வாரமும் ரூபாய் 4-0-0-க்கு வி. பி யில் அனுப்பி பணம் பெறுக என அன்னவருக்கு உறுதி மொழி கூறி யுள்ளேன். ஆகவே அன்னவர் அனுப்பும் வி. பி க்கு எனது வார்த்தைக்கு மதிப்புக் கொடுத்து வி. பி யைப் பெற்றுக் கொள்ளும்படி கோருகிறேன். ஏதேனும் குற்றம் ஏற்பட்டால் நான் ஜவாப்தாரி. ஆகை யால் அவர் அனுப்பும் வி. பி. களை உடனுக்குடன் ஒப்புக் கொள்க.

(ஒப்பம்) N. Sundara Nadar.

[இக் கார்டுடனேயே ஷை பழனிச் சாமி செட்டியாரிடமிருந்து வி. பி. யும் வந்து சேர்ந்தது. இக் கார்டு கைப் பிரதியில் அச்சிடப்பட்டிருக்கிறது.

இக் கார்டு எழுதின சுந்தர நாடார் பற்றி யெமக்கு யாதொன்றும் தெரிய வாராது. ஏதோ சூதிருப்பதாக எண் ணம் மேலாடியது. சந்தாப் பணப் பொறுப்பு பற்றி ஒன்றும் குறிப்பிட வில்லை. ஆகையால் அடியிற் காணுமாறு யாம் ஷை சுந்தர நாடாருக்கு ஓர் கார்டு எழுதினோம்.]

25—11—27.

மகா-ா-ா-ஸ்ரீ சுந்தர நாடாரவர் களுக்கு, ஈரோடு.

அன்பார்ந்த ஐயா,

உபய க்ஷேமம். தங்கள் கார்டு பார்த் துக் கொண்டோம். தாங்கள் தெரி வித்திருக்கிறதே போல் ஸ்ரீ S. R. பழனிச்சாமி செட்டியாரிட மிருந்து வி. பி யும் வந்திருக்கிறது. ஆனால் தங்கள் கார்டு விஷயமாய் முழு விபா மும் அறிந்த பின்னரே வி. பி யைப் பெற்றுக் கொள்வது பற்றி யோசிக்க விருக்கிறோம். ஆகையால் தாங்கள் யாம் கோருமாப் போல் முழு விபாமும் அறிவிக்கக் கேட்டுக் கொள்கிறோம். அதாவது, தாங்கள் இதற்குமுன் எம்சம்ப ந்தம் வைத்துக்கொண்டிருந்தவராகவும், தாங்கள் சம்பந்தப்பட்ட எக் காரியமும் யாம் அறிந்துள்ளவராகவும் தெரியக்

(இதன் தொடர்பு 3-ம் பக்கம் பார்க்க)

Tamil Heritage Foundation International Digital Library EBook collection



(2-ம் பக்கத்தின் தொடர்பு)

காணு திருப்பதோடு, ஷை பழனிச்சாமி செட்டியார் பற்றியும் யாம் அறிந்துள்ளவர் என்பதாகக் கூறுவதற்கு மில்லை. மேலும், அன்னவர் சேர்த்துத் தரும் சந்தாப் புள்ளிகளிடம் பணம் யார் பொறுப்பாக வசூலிக்கப்பட வேணும் எனும் விபரமும் விடுபட்டிருக்கிறது. வி. பி. யனுப்பும் முன் இன்னனைய விபரத் தெளிவு எமக்குக் காட்டியிருந்தால் நலமாயிருந்திருக்கும். எனவே தெளிவுறு சமாச்சாரம் விடுத்து மேற் காரியங்கள் நடைபெறச் செய்வீர்களாகவும். தங்கள் பதிலை யெதிர் பார்க்கிறோம்.

தங்களன்புள்ள

கு. பொன்னையா,

For மானேஜர்.

[மேற்படிகார்டுக்குபதிலை யெதிர் பார்த்துக் கொண்டிருக்கையில், ஷை பழனிச்சாமி செட்டியாரிடமிருந்து 27-12-27-ல் ஓர் கார்டு கிடைத்தது. அது வருமாறு:—]

26—11—27, ஈரோடு.

க்ஷேமம்.

கனம். பத்திராதிபர் அவர்கள் சமுகத்திற்கு பழனிச்சாமி உபய க்ஷேமம். சுந்தர் நாடார் சொல்லியபடி சந்தா விலாசங்களை வி. பி. செய்தன்னோம். ஆகவே, தயவு செய்து ஒப்புக் கொள்ளுக. உடனே பதில். பதில் பார்த்து இன்னும் சந்தா சேர்த்து அனுப்புகிறேன். ஆர்டர் பாரம் தேவை. உடனே பதில்.

(ஒப்பம்) S. R. Palanisamy.

விலாசம்:—

S. R. பழனிச்சாமி,
சின்னசாமி நாயக்கர்
ஓட்டல் காரை,
வாய்க்கால், ஈரோடு.

[இக் கார்டுக்கு யாம் பதி லெழுதவில்லை. சுந்தர நாடார் பதிலையே எதிர் பார்த்திருந்தோம். அவர் பதில் கண்டு தான் வி. பி யைப் பெற்றுக் கொள்வது பற்றி யோசிக்க வேண்டுமென்றிருந்தோம். பதிலும் வர வில்லை; வி. பி யும் காலப்படி தாமதித்திருந்து திரும்பிப் போய் விட்டது. பழனிச்சாமி செட்டியாரிடமிருந்தும் மறு தகவல் ஒன்றும் வரவில்லை.

பதில் வர வில்லையே; என்ன மர்மமோ வென யோசித்திருக்கையில் யாம் எழுதிய கார்டே, ஷை சுந்தர நாடார் என்பவர் தென்பட வில்லையெனும் குறிப்புடன் 10—12—27-ல் திரும்பி வந்துவிட்டது. கண்டு ஆச்சரியங் கொண்டோம்.

பார்த்ீர்களா பழனிச்சாமி செட்டியார் வேலையை! பிழைப்புக்கு நல்ல வழி தேடி யிருக்கிறார். பைத்தியக்கார உலகத்தில் செல்வாக்குள்ளவர்போலும். அச்சுக் காடையும், விஷயக் கோர்வையும், (பொய்யான) உயரிய பதவியிலுள ஓர் நாடார் சிபார்சையுங் கொண்டு எம்மை மயக்கி விடப் பார்த்தார்; பலிக்கவில்லை. தன் மயக்குதலுக்குள்ளாகி தடை யின்றி வி. பி யைப் பெற்றுக் கொள்வார்கள்; பணத்தை முடிந்து கொள்ளலாமென்றுபேதைமதி கொண்டனர் போலும்! வி. பி. திரும்பி அவரிடம் சென்ற வுடன், பணத்திற்குக் காத்திருந்த அவர் முகத்தில் பளீரென அரைந்தது போலிருந்திருக்கும். இவர் நாடோடி ஆசாமியா யிருக்கலாம். இவர் தந்துள விலாசத்தினின்றும் அப்படித் தான் தெரிகிறது. இப்போது எங்கு பம்மிக் கிடக்கின்றனரோ! இவர் நேர் வழியில் வயிற்றை நிறப்பிக் கொள்ளக் கூடாதா? என்னே ஏமாற்றம்! இவருக்கு நல்ல புத்தி வருமாக.

இன்னு ரனையர் பலர் கிளம்பி யிருக்கலாம். அவர் களபகட்டுக்காளாகி ஏமாந்து போவது பைத்தியக் காரத்தனம் குறிக்கும். ஆகையால் எல்லா பத்திராசிரியர்களும் இத்தகைய போக்கிரிகளின் எண்ணம் ஈடேற்ற மாகாதிருக்க எச்சரிக்கை கொள்ள வேண்டு மென்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

# சத்தியமே ஜெயம்.

## சொல்லும், செயலும்.

சென்னை மாகாணத்தை இருள் சூழ்ந்த மாகாண மென்று பிற மாகாணத்தார் சொல்லுவது வழக்கம். காரணம் யாதெனில், கால தேவதை யானது பிராமணரல்லாதாரியக்கத்தை உண்டாக்கும் வரை, பிராமணரல்லாதார் பிராமணப் புரோகிதரின் மாய வார்த்தைகளை நம்பி மதத்தின் போராலும், இராஜீயப் பிராமணரின் தேசாபிமானப் பிரசங்கங்களின் போராலும் கட்டுப் பட்டு பிராமணன் கிழித்த கோட்டைக் கடவாமல் நடைப் பிணமாய்க் கிடந்து சுயமரியாதை யின்றி அடிமை வாழ்க்கை நடத்தி அறிவு மழுங்கிக் கிடந்தமையாலேயே யாகும்.

இந்திய நாடு செய்த புண்ணியத்தாலேயே தென்னாட்டில் திருவானர்கள், டாக்டர். டி. எம். நாயரும், பிட்டி தியாகராயரும் பிராமணரல்லாதார் புத்துயிர் பெற்று சுயமரியாதை யோடு வாழ பிராமணரல்லாதாரியக்கத்தை ஆரம்பித்தனர். அது முதல் பிராமணரும் எவ்வித முயற்சி செய்தாவது அவ்வியக்கத்தை அழித்து விடக் கங்கணம் பூண்டு வேலை செய்து வருகின்றனர். அம் முயற்சியில் தேசாபிமானிகளெனப் பேர் வைத்துக் கொண்ட சில பிராமணத் தலைவர்களின் சொல்லும், செயலும் ஒத்ததா யில்லாமல் வெறும் மோசமாயிருப்பதால் அதை வாசகர்களுக்கு எடுத்துக் காட்டவே இக் கட்டுரையை வரைகின்றேன்.

திரு. எஸ். ஸ்ரீநிவாசய்யங்கார்.

காங்கிரஸ் மகாசபைக்கு ஒரு வருஷமாய்த் தலைவரா யிருந்து வருகிற எஸ். ஸ்ரீநிவாசய்யங்காரவர்கள் சென்ற கௌகத்தி காங்கிரஸ் அக்கிராசனப் பிரசங்கத்தில் சென்னை மாகாணத்தில் வகுப்பு வாதத்தை ஒழித்து விட்டதாகப் பெருமையாய்ப் பேசிக் கொண்டார். அவர் ஒழித்து விட்ட வகுப்பு வாதம் மறுபடி எப்போது வளர்ந்த தென்று அவர் எங்குமே குறிப்பிட்டுச் சொன்னதாகத் தெரிய வில்லை. ஆயினும் கல்கத்தாவில் கூடிய அகில இந்திய காங்கிரஸ் கமிட்டித் தீர்மானத்தின் மூலம் வடநாட்டிலுள்ள இந்து முஸ்லீம் ஒற்றுமையை நீக்கி விட்டதாகச் சொல்லிக் கொண்டு, இப்போது நமது மாகாணத்திலுள்ள பிராமண, பிராமணரல்லாதார் வேற்றுமையை ஒழிக்கப் போவதாகச் சில நிபந்தனைகளைக் குறிப்பிட்டிருக்கிறார். சென்ற வருஷமே ஒழித்து விட்ட வகுப்பு வாதம் இப்போது எப்படி வளர்ந்து விட்டது? திரு. அய்யங்கார் மனதில் அது எப்போதும் நீங்கியதில்லை யென்பது தான் நமக்குப் புலப்படுகிறது.

காங்கிரஸ் மகாசபை யானது சாதாரண ஸ்தல ஸ்தாபனங்கள் முதல் சட்டசபை வரையுள்ள சகல பொதுச் சபைகளையும் காங்கிரஸ் காரர்கள் கைப்பற்ற வேண்டு மென்று தீர்மானஞ் செய்திருந்தும், சென்னைக் கார்ப்பொரேஷன் தலைவர் ஸ்தானத்துக்குத் தேர்தல் நடக்க வேண்டிய சந்தர்ப்பத்தில், பிராமணரல்லாதாரும் காங்கிரஸ் தலைவருக்கு எதிர்க் கட்சியா ரென்று தோன்றுபவர்களுமாகிய ஜஸ்டிஸ் கட்சியார்கள், காங்கிரஸ் சுயராஜ்ஜியக் கட்சித் தலைவராய்க் கார்ப்பொரேஷனிலிருக்கிற திருவானர். சாமி—வெங்கிடாசலஞ் செட்டியார் தலைவராக நிற்கச் சம்மதிப்பின் தாங்களும் அவருக்கே ஓட்டுப் போடுவதாக வாக்களித்த போது, ஒற்றுமைப் பிரிய ரென்று வேஷம் போட்டு நடிக்கிற திரு. ஸ்ரீநிவாசய்யங்கார் அவ்வுதவியைப் பெற மறுத்த தோடல்லாமல் எக் காலத்திலும் காங்கிரஸில் சேராதவரும், காங்கிரஸ் காரர்கள் ஒத்துக் கொள்ள முடியாத கொள்கை யுடையவரும், சுயேச்சைக் கட்சி யென்று பேர் வைத்துக் கொண்டவருமாகிய திருவானர். ஜி. எ. நடேசய்யருக்கு சுயராஜ்ஜியக் கட்சியார் ஓட்டுப் போட வேண்டு மென்று சொல்லியது வகுப்பு வாதமா? கட்சி யபிமானமா? தேசாபிமானமா? என்று கேட்கிறோம். இம்மட்டோடாவது நின்றிருந்தால் நலமாயிருக்கும். திரு. சாமி—வெங்கிடாசலம், ஜஸ்டிஸ் கட்சியாரின் ஓட்டுப் பலத்தால் ஜெயித்திருந்தால் அவர் மனச் சான்று கட்சிக் கொள்கைக்கு மாறு பட்டு விடுமாம். சென்னைக் கார்ப்பொரேஷனிலும், சென்னை சட்ட சபையிலும் சுயராஜ்ஜியக் கட்சியின் பிரதிநிதிகளால் தலைவராகத் தேர்ந் தெடுக்கப் பெற்ற ஒரு கனவானை, மனச் சான்றுக்கு மாறுபட நடந்துவிடுவா ரென்று அபிப்பிராயங் கொடுப்பது அவமதிப்பில்லையா? இதைப் பார்க்கிலும் ஒரு தலைவரைத் தாக்கிப் பேச வேண்டியது அவருக்கும் தமக்கும் அபிப்பிராய பேத மில்லையா? என்றால், அது தனி விஷய மென்று மழுப்புகிறார். தேசத் தொண்டுக்கும், தனி விஷயத்துக்கும் சம்பந்த மில்லை யென்பதை நாமும் ஒத்துக் கொள்ளுகிறோம். காங்கிரஸ் தீர்மானத்துக்கும் சுயேச்சைவாதிக்கும் என்ன சம்பந்தம்! பிராமணன் என்ற வகுப்பு சம்பந்தத்தைத் தவிர வேறு சம்பந்த மிருக்கிறதாய் நாம் அறிந்து கொள்ள முடியவில்லை. தவிரவும் இன்னொரு கேள்வியும் இங்கு எழுகிறது. பிராமணரல்லாதார்களில் ஜஸ்டிஸ் கட்சி யபிமானமுள்ளவர்களையும், சுயராஜ்ஜியக் கட்சியாருக்கு ஓட்டுப் போடும்படி திரு. அய்யங்கார் செய்த பிரசாரங்களும் அவர்கள் ஓட்டுகளைப்பெற்று கார்ப்பொரேஷன் சட்டசபை முதலிய ஸ்தானங்களில் தமது கட்சியாரை யிருத்தியதையும் திரு. ஸ்ரீநிவாசய்யங்கார் மறந்து விட்டாரா? என்ன! ஜஸ்டிஸ் கட்சியில் தீவிர வாதியா யிருந்த திருவானர் ஓ. கந்தசாமி செட்டியாரை இவர் எவ்விதமாயாதரித்து வருகிறார்? இது உலக மறிந்த ரகசியமல்லவா? பின்னையேன் ஜஸ்டிஸ் கட்சியின் உதவியையேற்று தமது கட்சியார் ஒருவர் கார்ப்பொரேஷன் தலைவர் பதவியை அடையும்படி செய்யக் கூடாது? "தனக்கென்றால் தாய்ச் சேலையும் (கோவணம்) படிக்குக் கொள்ளும்" என்று பழமொழி யொன்றுண்டு. அதுபோல கார்ப்பொரேஷன் பிரஸிடெண்டு பதவிக்கு ஒரு அய்யரும், ஒரு செட்டியாரும் அபேட்சகரானால் தமது வகுப்பாராகிய பிராமணரை ஆதரிக்க வேண்டிய அவசியம் காங்கிரஸ் தலைவராகிய ஸ்ரீநிவாசய்யங்காருக்கு நேர்ந்து விட்டது. என்ன செய்வார் பாவம்! பிராமணரல்லாதாராகிய செட்டியாரை எப்படி ஆதரிக்க முடியும்? இங்கு தான் உண்மை காணவும் முடியும். பொது ஜனங்கள் மூக்கியமாய்ப் பிராமணரல்லாதார் முன் போல, பூதேவர்களாகச் சொல்லிக் கொள்ளுகிற பார்ப்பனர் பாதம் வருடிக் கொண்டிருக்க முடியாமல் கால தேவதை செய்து விட்டதால் தான், தம் மீதுள்ள பழியை மாற்றிக் கொள்ள ஒரு அறிக்கையை வெளியிட வேண்டிய அவசியம் நேர்ந்து விட்டது. காங்கிரஸ் தலைவர் சொல்லும் செயலும் நமக்கு விழிப்பேற்படும்படி செய்து விட்ட நிலைமையில் அய்யங்கார் செய்யும் பிராமண பிராமணரல்லாதார் ஒற்றுமையும், அவர் பிரயாசை யெடுத்து முடித்த இந்து முஸ்லீம் ஒற்றுமை (அப்துல்ரஷீது தாக்கிவிட்டபோதுள்ள கலகம்) போல முடிந்து விடாமலிருக்க வேண்டுமே என்று கவலைப்பட வேண்டியதா யிருக்கிறது.

### பொருட் காட்சி.

காங்கிரஸ் மகாசபை நடை பெறும் பொழுது அகில இந்திய கைத்தொழில் பொருட் காட்சி சில காலமாய் நடந்து வருகிறது. அக் காட்சியில் இதுவரையும் கதர் மணமே கமழ்ந்து கொண்டிருந்ததாய்த் தெரிகிறது. நடக்கப் போகிற சென்னை பொருட் காட்சியோ அந்நிய நாட்டுச் சாமான்களும் சேர்ந்து நடக்கப்போகிறதாம். அதை ஆட்சேபித்து இந்திய சட்ட மெம்பர் எம். கே. ஆச்சாரியார் பத்திரிகைக்கு எழுதிக் கொண்டிருந்தார். இப்போது ஒரு நிர்வாகக் கூட்டம் கூடி இந்தியத் தொழிலுக்குப் போட்டி போடாத அந்நிய நாட்டுச் சாமான்களை வைக்கலா மென்று தீர்மானித்திருக்கிறார்களாம். திரு. எம். கே. ஆச்சாரியாரும், "சுதேச மித்திரன்" ஆசிரியர் திரு. எ. ரெங்கசாமி அய்யங்காரும் அகில இந்திய சுயராஜ்ஜியக் கட்சியின் சென்னை மாகாண முக்கிய ஸ்தர்களென்பதும், காங்கிரஸ் தலைவர் திரு. எஸ். ஸ்ரீநிவாசய்யங்கார் இந்திய சுயராஜ்ஜியக் கட்சிக்கே தலைவ ரென்பதும் நேயர்கள் அறிந்த விஷயமே. இம் மும் மூர்த்திகளின் முயற்சியினலேயே இவ்வருஷத்தில் அகில இந்திய நேஷனல் காங்கிரஸும், பொருட் காட்சியும் சென்னையில் நடக்கப் போகிறது. பொருட் காட்சிக்காக சென்னைக் கவர்னரிடமும், சென்னைக் கவர்ன்மெண்டிடமும் திரவிய சகாயம் பெற்றது இவர்களுக்குத் தெரியாமலா நடந்தது? அந்நிய நாட்டுச் சாமான்களை வைப்பதற்கு ஏற்பாடு செய்தது இவர்களுக்குத் தெரியாதா? எம். கே. ஆச்சாரியாரின் கடிதங்களிலிருந்தும், நிர்வாக கமிட்டியின் கூட்ட நடவடிக்கைகளிலிருந்தும் இவர்களெல்லாம் கமிட்டி மெம்பர்களே என்று தெளிவாய்த் தெரிகிறது. தாங்களே தேச பக்தர்களென்றும், தேசத்திற்கு சுயராஜ்ஜியம் வாங்கிக் கொடுக்கப் போவதாகவுஞ் சொல்லுகிற இம் மகான்கள், அந்நிய நாட்டுச் சரக்குகள் பொருட் காட்சியில் வைக்க ரகசியத்தில் ஒத்தாசையாயிருந்து கவர்ன்மெண்டிடமும், கவர்னரிடமும் பணம் வாங்கிக் கொண்டு காரியம் முடியப் போகிற சந்தர்ப்பத்தில், திரு. எம். கே. ஆச்சாரியார் பேரால் பத்திரிகைக்கு அறிக்கைகளை வெளியிடுவதும், கூட்டங் கூட்டுவதும், தீர்மானங்கள் செய்வதுமாகிய நாடகத்தை நடத்தி, தேச மக்களின் கண்ணைக் கட்டி விட வேலை செய்கிறார்கள். நமது ஆச்சாரியார் வைதீக ரானதால் யோக நிஷ்டையைக் கைக் கொண்டு சுவர்க்க இன்பத்தை அநுபவித்துக் கொண்டிருந்து இப்போது தான் பூமிக்கு வந்திருக்கிறார் போலும். அந்தோ! இத்தனை வேகமும் தேசாபிமானத்தின் போரலா போடப்பட வேண்டும்? இதை நோக்கும்போது நமக்கு ஒரு கதை ஞாபகத்திற்கு வருகிறது. திருட னொருவன் களவு செய்வதற்காக ஓர் வீட்டின் மெத்தை மீதேறி உள் பக்கத்து வெளியில் குதித்தான். அது சமயம் வீட்டுக் குடையவர் சத்த மில்லாமல் விளக்கு முன்னிருந்து படித்துக் கொண்டிருந்தார். பார்த்தான் திருடன். திருடருக்குச் சமயத்தில் குயுத்தியான யோசனைகளெல்லாம் தோன்றுவதியல் பல்லவா? அது போலவே ராம், ராம்; இது தானு உலகம்! இதுவோ பூலோகம்!! ஆ! வைகுந்த வாசா! என்னை இங்கு விடாதேயும்; உம் முடைய பாதத்தில் சேர்த்துக் கொள்ளும் என்று பெருங் கூச்சலிட்டான். வீட்டுச் சொந்தக்காரர் மிகவும் பக்திமானுதலால் இவர் யாரோ பெரியார் போலிருக்கிறது என்று திருடனுக்கு வேண்டிய உபசாரஞ் செய்து அனுப்பி வைத்தாராம். அது போலவே நமது ஆச்சாரியாரும் பொருட் காட்சிக் கமிட்டியார் செய்த வேலைகள் தமக்கு ஒன்றுந் தெரியாததுபோலவும், தெரிந்த உடனே எழுதிக் கேட்டது போலவும், அதற்கு யாரோ ஒருவர் தமக்குத் தெரியாத பேர் வழி கை யெழுத்துப் போட்டுக் கடிதம் எழுதியது போலவும் நடித்து விட்டு கடைசியாக அந்நிய நாட்டுச் சாமான்களில் இந்தியச் சாமான்களுடன் போட்டி போடாத சாமான்களை வைப்ப தென்று தீர்மானஞ் செய்து முடித்து விட்டார்கள். இந்த மும் மூர்த்திகளின் பிரிட்டிஷ் சரக்குப் பகிஷ்காரப் பேச்சுகள் செயலில் எவ்வளவு தூரம் காட்டப்பட்டிருக்கிற தென்பதை நேயர்களே யூகித்துக் கொள்ள வேண்டியது.

இவ்வளவு தூரம் வேஷம் போட்டதெல்லாம் அந்நிய மாகாணத்தார் பார்த்துத் தங்களை யேளனஞ் செய்வார்களென்பதற்காகவும், காங்கிரஸ் சந்தர்ப்பத்தில் பிராமணரல்லாதார் தங்கள் குட்டுகளை யெல்லாம் துண்டுப் பிரசுரங்கள் மூலம் வெளியிட்டு நாடு சிரிக்கச் செய்து விடுவார்களே என்பதற்காகவும், காரியம் முந்தி விட்டதால் தாங்கள் அதற்கு மேல் செல்வதற்கு முடியவில்லையென்றுவெளிக்குக்காட்டிக் கொள்வதற்காகவுமே யன்றி வேறல்ல. இப்பேர்ப்பட்ட தலைவர்கள் தானு, இந்தியத் தொழிலையும், இந்திய நாட்டையும் காப்பாற்றுவார்களென்று சுயராஜ்ஜியக் கட்சியிலுள்ள பிராமணரல்லாதார் சிந்தித்துப் பார்க்கும்படி வேண்டுகிறோம்.

### மநு பிராமணரல்லாதாரா?

திருநெல்வேலியில் கூடிய சுயமரியாதை மகாநாட்டில் மநுஸ் மிருதியை தீயி லிட்டுப் பொசுக்கியதைப் பற்றி திரு. நடராஜய்யரை ஆசிரியராகக் கொண்ட பம்பாய் "இந்தியன் டெயிலி மெயில்" பத்திரிகை சுயமரியாதைத் தலைவர்களைத் தூற்றி எழுதி விட்டு "ஆனல் மநு பிராமணரல்லாதார் என்பதை ஞாபகப்படுத்த வேண்டியதிருக்கிறது" என்று முடித்திருப்பதாய்த் தெரிகிறது. இது தான் பிராமணன் குட்டி யென்பது. திரு. நட

(இதன் தொடர்பு 6-ம் பக்கம்)

Tamil Heritage Foundation International Digital Library EBook collection



சாதிகுலம் பிறப்பிறப்புப் பந்த முத்தி
அருவுருவத் தன்மை நாம

ஏதுமின்றி யெப்பொருட்கு செவ்விட
த்தைப் பிரிவற நின்றியக்கஞ் செய்யுஞ்

சோதியை மாத்தா வெளியைமனதவிழ
நிலையான துரிய வாழ்வைத்

தீதில் பரமாம் பொருளைத் தீங்கலே
நினைவாகச் சிந்தை செயவாம்.

---

# நாடார்குலமித்திரன்

பிரபவ ஞூ மார்கழி மீ ௪ உ

## சுயமரியாதைச் செல்வன்.

சுயமரியாதைச் செல்வன் பிறந்து சுமார் மூன்று வருஷங்கள் தாணுகின்றன. இவன் கோவையில் பிறந்து தஞ்சையிற் றவழ்ந்து மதுரையில் நடந்து திருநெல்வேலியிற் புகுந்து ஆண்மகனுக் குரித்தான முப்பத்திரண்டு லட்சணங்களுடன் விளங்குகின்றான் என்பதற்குச் சான்ருக சமீபத்தில் திருநெல்வேலி ஜில்லா சுயமரியாதை மகாநாட்டில் லைக்கம் வீரர் ஸ்ரீமான் ஈ. வி. இராமசாமி நாயக்கரவர்கள் தலைமையில் நிறை வேறிய முப்பத்திரண்டு தீர்மானங்களும் விளங்குகின்றன. அத் தீர்மானங்கள் முப்பத்திரண்டும் ஆண்டகைமை யுள்ளனவும், பொன்னே போல் போற்றத் தக்கனவுமாகும். அவைகளனைத்தையும் மற்றொரு பக்கத்தில் பிரசுரித்திருக்கிறோம்.

சுயமரியாதைச் செல்வன், பால் மணம் மாருத இச் சிறுவயதிலேயே திருநெல்வேலியிற் புகுந்த தைரியத்தை மிகவும் பாராட்டுகின்றோம். பொருமை கொண்டான், அகங்காரன், சுயநலன், மோசன், நாசன், பேதன் என்னும் வேற்றுமைக் கொள்கைக் கொள்ளைத் தலைவர்களை விரைவில் வென்று வெற்றி மாலை சூடுவானென்றே நம்புகின்றோம்.

நிறை வேறியிருக்கும் முப்பத்திரண்டு தீர்மானங்களிற் பெரும்பாலும் பிராமணக் கொடுமைகளிலிருந்து பிராமணரல்லாத பெரு மக்கள் விடுபட வேண்டிய கருத்துடையவைகளேயாம். அவைகளில் சில முக்கியமான தீர்மானங்களாவது அனுஷ்டானத்துக்கு வந்து விட்டால் இருள் சூழ்ந்த தென்றுடு, வேற்றுமை பிறந்த நின்றுடு என்ற அபவாதங்கள் அறவே ஒழிந்து விடக் கூடும். ஆங்கு அவைகளை அனுஷ்டானத்திற்குக் கொண்டு வர வேண்டிய பொறுப்பு பிராமணர்களுக்கு மட்டு மல்ல; பிராமணரல்லாதாருக்கே அதிக மிருக்கின்றது. அதாவது:— ஜாதியல் உயர்வு தாழ்வு என்ற பேதாபேதங்களும், தொடாமை, நெருங்காமை, ஆலயப் பிரவேசத் தடையென்ற பொருமைகளும் பிராமணீயத்திலிருந்து பிறந்த தென்றாலும், அவ் விஷம் பிராமணரல்லாத பெருஞ் சமுகங்களிடையும் பாவி ஏழை மக்கள் உதிரத்தை உறிஞ்சிக் கொண்டிருக்கின்றன. பிராமணர்களுக்கு அடுத்த படியாக வேளாளர்களிற் பெரும்பாலோர் இக் கொடுமைக் குடன்பாடா யிருந்து வருகிறார்கள். இக் காரணம் பற்றியே பிராமணர்களைப் பார்த்து கொடுமைக் கொள்கையை விட்டு விடுபடுங்கள் என்று நாம் கூறும் போது உங்களுக்குள் வேற்றுமை யில்லையா? நீங்களெல்லோரும் ஒன்றறக் கலந்துள்ளீர்களா? என்று கடாவுகின்றார்கள். இது வெள்ளையர்களிடமிருந்து கற்ற பாடமே என்றாலும், அதில் உண்மையில்லாமலுமில்லை. நம்முடைய குறைகளை யுணர்ந்து நாம் திருந்தாதவரையில் பிறரைத் திருத்துவ தென்பது கனவிலும் கருத முடியாது. ஆகையால் சமுக சீர்திருத்தமும், சுயமரியாதையும் உண்மையில் அடைய வேண்டுமானல் பேசிய பேச்சுகளும், செய்த தீர்மானங்களும் பிரசவ ஞானம் போல் மறந்து விடாமல் அனுஷ்டானத்திற்குக் கொண்டு வர முயற்சிக்கும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

தற்போது காங்கிரஸ் போர்வையைப் போர்த்து சமயோசிதமாய் நடிக்கும் சுயநலமிகளை நாம் அழுத்தமாய்க் கண்டித்து வருகிறோம். வாய் வேதாந்திகளுமாவா ரென்பதை ஜனங்களுக்கு பகிரங்கப்படுத்தி வருகின்றோம். அதனால் அத் துரோக சிந்தையுள்ளவர்களை வெறுத்து ஜனங்களுக்குச் சுயமரியாதைத் தாகம் அதிகரித்திருக்கிறது; சுயராஜ்ய தாகம் இரண்டாம் பட்சமாயிருந்து வருகிறது. சுயமரியாதையடைய வேண்டியதே முதற்படியாகு மென்று திரு. ஈ. வி. இராமசாமி நாயக்கரவர்கள் ஆதி முதல் வற்புறுத்தி வருகிறார். தற்போது இந்தியாவில் நுழைந்த ஆப்கன் வேந்தர் அருமையான பிரசங்கம் அதை உறுதிப்படுத்தி யிருக்கின்றது. ஆகையால் சுயமரியாதை வீரர் பிராமணரல்லாத சமுகங்களுக்குள்ளேபடிப் படியாய் வைத்துக் கொண்டிருக்கும் அற்ப வேற்றுமைகளை விட் டொழிப்பதுடன் உயர்ந்த ஜாதி மயக்கத்தையும் உடனே விட்டு விட்டு எல்லோரும் சகோதரர் என்ற படிக்கு இறங்கி விட வேண்டும். சடையைப் பிடித்திழுத்தால் சந்நியாசி தானே வருவா னென்பதற் கேற்ப ஒவ்வொருவரும் உயர் ஜாதிப் படியை விட்டு விட்டால் பிராமணன் என்ற முடி தகர்ந்து விடு மென்பதில் சிறிதும் சந்தேகமில்லை. திருநெல்வேலி ஜில்லாவிலுள்ள பிராமணரல்லாதாருக்குள் சமுக வேற்றுமைகள் சிறிதேனும் விலகி அவர்களின் வலிமை ஒன்று பட்டு விட்டாலும் போதும். பிராமணர்கள் கொடுமை பஞ்சாய்ப் பறந்து விடும். அவர்களின் உயர் ஜாதித் திமிரும் அடங்கிப் போகும்.

திருநெல்வேலி ஜில்லாவில் பிராமணர்கள் குடி யிருக்கவும், கொடுமைகளை வளர்க்கவும் பிராமணரல்லாத சில சமுகங்கள் தான் இடங் கொடுத்ததுடன் அவர்கள் கொடுமைகளையும் கற்றுக் கொண்டார்கள். அந்த ஜாதியார்கள் சொல்லும், செயலும் நமக்கு அவமான மிழைக்கத்தக்கதாகக் கருதுகிறேமோ, அச்சொல்லையும், செயலையும் நாம் நமக்குள்ளே சில வகுப்பினர் கட்கு அவமான மிழைக்கக் கூடிய அனுஷ்டானங்களை உடனே மாற்றி விட வேண்டும். நம் நாட்டிலே பிரிட்டிஷ் ஆட்சியைப் பார்க்கிலும், பிராமணாட்சி பலமாக வேரூன்றிக் கிடக்கின்றது. அதன் பாதத்தை நம் தலைமேல் வைத்து அழுத்திக் கொண்டு நம்மை நிமிர்ந்து பார்க்க விடாமல் வைத்துக் கொண்டு நமது நித்திய வாழ்க்கைக்கு இன்றியமையாத பாவனையிற் கலந்து விட்டது. ஆகையால் அத் தீமையைக் கடந்து தேசம் விடுபடுவ தென்றால் வெறும் பேச்சிலும், எட்டுத் தீர்மானங்களிலும் முடியாது. திரிகரண சுத்தியுள்ள பிராமணரல்லாத பெருந் தலைவர்கள் நன்றென்பதை இன்றே ஏன் செய்யலாகா தென்று கேட்கிறோம்.

சுயமரியாதைக் கொள்கையைப் பரவச் செய்வதற்காகப் பிரசாரஞ் செய்யவும், துண்டுப் பிரசுரங்கள் வழங்கிக் கிளர்ச்சி செய்யவும், நிதி யொன்றுசேர்க்கவும் பிராமணரல்லாத தலைவர்கள் பெரும் முயற்சி யெடுப்பார்களென்று நம்புகிறோம்.

---

## மகாத்மா காந்தியும், நாமும்.

மகாத்மா காந்தி தமிழ்நாட்டு விஜய சம்பூரணம் என்ற தலைப்பில் 14-11-27-ல் வெளிவந்த மித்திரனில் நாம் மகாத்மா வர்ணச்சிரம தர்மத்தைப் பற்றி நம தபிப்பிராயங்களை வெளியிட்டிருந்தோம். அதைப் பார்த்த சில நண்பர்கள் மிகவும் அழுத்தமாக நம்மைக் கண்டித்து கடிதங்களெழுதி யிருக்கின்றார்கள். அக்கடிதங்கள் நமக்கு பிரசுரிப்பதற்காக எழுதப்படாததால் அவ் விஷயங்களையும் அவர்கள் பெயர்களையும் நாம் வெளியிட விரும்பவில்லை.

மகாத்மா மீது பக்திவிசுவாசமுள்ளவர்களில் யாமும் ஒருவன். அவருடைய உயரிய நோக்கங்களில் பூரண நம்பிக்கையும் அனுதாபமுமுண்டு. தெய்வீகத் தன்மையுள்ள கிருஷ்ணன், புத்தர், கிறிஸ்து முதலிய மகாத்மாக்களின் உயர்வான உபதேசங்கள் எப்போதும் நம் மனத்திடை நின்று நிலவுவது போல் காந்தி மகாத்மாவின் அறவுரைகளும் நம்மனதில் அதிக ஆழமாய்ப் பதிந் திருக்கின்றன. அவருடைய பரிசுத்த வாழ்க்கையிலும், தியாக குணத்திலும் உலகமே கட்டுண்டதாய்க் காணும்போது வேறு யார்தான் மீள்வர்? உலகில் மிளிரும் சர்வசத்திகளுக்குந் தாயான அன்பெனும் பெரிய சக்தி அவரிடம் காழாக முற்றிவருகிற தென்பதை யார்தான் மறுக்கக்கூடும்? பல சுயநலக்காரர்களும், ஆடம்பரப் பிரியர்களும், மகாலோபிகளுங்கூட அவருடைய புனிதவாழ்க்கையிலீடுபட்டு பொது நலமும், தன்னடக்கமும், தியாக குணமுமுள்ளவர்களாயிருக்கிறார் களென்பதிற் சந்தேகமில்லை. மேனாட்டுக் கொள்கை இந்தியாவின் உயிர் நாடி முழுதும் அறுத்து விடாமல் மகாத்மா காந்தி, புராதன வாழ்க்கையை ஞாபகப்படுத்தி ஆபத் பாந்தவராணென்பது மறுக்கமுடியாத உண்மை. இவ்வாறு அவர்செய்த நன்மைகள் பலவுள. அவைகளை இந்தியா எதிர்காலத்திலுங் கூட மறக்கமுடியாததேயாம்.

ஆனல் தமிழ்நாட்டிற்குப் புறம்பான வர்ணச்சிரமதர்மக் கொள்கையிற்றான் தமிழ்நாடு அவரோடு முரண்படுகிறது. அவரின் தமிழ் நாட்டுப் பிரயாணப் பிரசங்கங்களை ஆதிமுதல் அந்தம் வரையும் வெகுவாய்க் கவனித்து வந்தோம். இடையில் நடந்த விவாதங்களையும், வினு விடைகளையும் கவனித்து வந்தோம். தமிழ் நாட்டை நன்குயறிந்த பிறகாவது நல்லபிப்பிராயங் கூறுவாரென்று எதிர் பார்த்தோம். அவர் பிரயாண முடியு முன், முழுமனமுந் தெரியு முன் நாமொன்றுஞ் சொல்லாமலே காத்திருந்தோம். முடிவாகத் தமிழ்நாட்டை விட்டு வெளியேறும்போது திருப்பூரில் பெரிய வெடிகுண்டைப்போட்டுவிட்டார். அதாவது, பிராமணனல்லாதவன் இப்பிறப்பில் பிராமண தர்மத்தை திரிகரண சுத்தியுடன் செய்து வந்தாலும், அவன் அடுத்த ஜென்மத்தில் பிராமணன் வயிற்றில் பிறந்துதான் பிராமணனுகலா மென்பதே.

இதைக் கேட்ட பிறகுதான் தமிழ்நாடு திகிலடைந்து விட்டது. அதன்பிறகுதான் நம்முடைய அபிப்பிராயத்தை வெளியிட்டோம். அது நமது கடமையுமாகும். எல்லோருக்கும் மனச்சாக்ஷியுண்டு. மனச்சாட்சி ஒத்துக்கொள்ளாத ஒன்றை மகாத்மா சொல்லி விட்டாரென்று ஒத்துக் கொள்வது அறியாமையும், மூடபக்தியுமாகும். 'மூக்கண்ணைக்காட்டினுங் கவி குற்றமே குற்ற'மென்று ஆண்டகைமையுடன் அறிவித்த நற்கீரர் பிறந்த நந்தமிழ் நாடும் நாமும் மகாத்மா முரண்படக் கூறும் வர்ணச்சிரமதர்மக் கொள்கையை எவ்வாறு ஏற்க முடியும்? எவ்வாறெழுதாமலிருக்கமுடியும்?

தற்காலத் தமிழ் முனிவரும், சமரச சன்மார்க்க நெறிமுறையாளரும், சிறந்ததேச பக்தரும், "நவசக்தி" ஆசிரியரும், மகாத்மா காந்தி மீது திரு. வி. ஆர். ஆச்சாரியாரைப் பார்க்கிலும் அதிக விசுவாசமுள்ள வருமான திரு. வி. கலியாணசுந்தர முதலியாரவர்கள் 7-12-27ல் வெளிவந்த "நவசக்தி" தலையங்கத்தில் பொறித்த பொன்னுரையில் என்ன சொல்லியிருக்கிறார் என்பதை எம் மீது சீற்றம் கொள்ளும் அன்பர்கள் பார்த்துக் கொள்ளட்டும். அதை மற்றொரு பத்தியில் பிரசுரித்துமிருக்கிறோம். பிறப்பினுல் உயர்வு தாழ்வு கிடையாது; தொழில் வேற்றுமை கிடையாது; பிரம்ம வித்தையை யாரும் கற்கலாம் என்றால் பிராமணனுக்குப் பிறந்து தான் பிராமணனுகலாமென்று மகாத்மா கூறுவதைஎம்மீது குற்றங்காணும் நண்பர்கள் சற்று அமைதியுடன் கவனித்துப் பார்க்க வேண்டுகிறோம்.

கள்ளும், ஊனுமுண்டு, கொலையுங், களவுங் கூசாமற் செய்து, பொய்யும், புளுகும் புகல்வதே புகழெனக் கொண்டு, தன்னலமே எல்லா நலமென்று எந்நாட்டிலும் எந்நாளும் எண்ணி வந்திருக்கும்- வரும் பிராமணனுக்கு பிராமணனல்லாதவன் ஜெனன முதல் மரணம் வரையும் பொன்னையும் பெண்ணையும் கொடுத்து மறுபிறப்பில் பிள்ளையுமாக வா பிறக்க

Tamil Heritage Foundation International Digital Library EBook collection



## சந்தா நேயர்களுக்கு அறிவிப்பு.

வழக்கப்படி வி. பி. யனுப்ப வேண்டிய விடங்களிலுள்ள நம் சந்தா நேயர்களுக்கு அவரவர்க்குரிய கால வரைப்படி வி. பி. யனுப்பிக் கொண்டிருக்கிறோம். வி. பி. யனுப்பப் பெறும் நேயர்களொவ்வொருவரும் வி. பி. யைப் பெற்று மித்திரன் அபிவிருத்தியை நாட வேண்டுகிறோம். தாம் தாம் பணம் செலுத்த வேண்டிய காலம் தெரிந்த அன்பர்கள், அதன்படி வி. பி. யனுப்பத் தேவை யின்றி பணத்தை மணியார்டர் மூலம் அனுப்பி விட்டால் மிகவும் உசிதமாயிருக்கும். மித்திரனின் ஊக்கமும், உற்சாகமும் நேயர்கள் புரியும் ஆதரவு பொறுத்தது என்பது சொல்லத் தேவை யில்லை. ஆகையால் தயவு செய்து நண்பர்கள் மித்திரன் பாலுள்ள அன்பு முன்னிட்டு ஆடங்க மின்றி சந்தாப் பணம் செலுத்திக் கொள்ளுவார்களாக வென அறிவித்துக் கொள்கிறோம்.

மானேஜர்.

## அரியவுரை.

அழிந்து போகக்கூடிய நமது சரீரத்தை அலங்கரித்துக்கொண்டு இன்னும் சிறிதுகாலம் ஜீவித்திருப்பதற்காக பல உயிர்களை வதை செய்வதில் நாம் அவமானமடையவில்லை. இதனால் நமது உடலையும் ஆத்மாவையும் நாம் வதை செய்து கொள்ளுகிறோம். ஒரு பழைய வியாதியை சொஸ்தம் செய்து கொள்ள முயற்சி செய்கையில் நூறு புதிய வியாதிகளை உண்டு பண்ணிக் கொள்ளுகிறோம். உணர்ச்சியைச் சுவைக்க விரும்பி சுகத்தை அனுபவிக்கும் சக்தியையே இழந்துவிடுகிறோம். நம்மெதிரிலேயே இவ்விதம் நடைபெறுகிறது. கண்ணிருந்தும் பாராதவர்களாக நாம் இருக்கிறோம்.

மகாத்மாகாந்தி.

## மதிப்புரை.

### தாலாட்டுக்கீதம்.

“குழந்தை சேசுவின் கொட்டிப் பாட்டு” எனும் தாலாட்டுக் கீதம் ஒன்று வரப் பெற்றோம். இது வடக்கன்குளம் ஸ்ரீமான் சி. கூ. சவரிமுத்து நாடார் பாடியது. கிரிஸ்தவ சகோதர சகோதரிகள் இன்பமாய்ப் பாடுவதற் கேற்ற வர்ண மெட்டுகளில் பாடப் பெற்றிருக்கிறது. விலை அணா 1½ தான். கிடைக்குமிடம்,

எஸ். சவரிமுத்து நாடார்,
டெய்லர், புல்லர்ஸ் ரோடு,
சிலமன் கார்டன்,
கொளும்பு.

---

வேண்டும்? இவை கடவுள் விதியா? கற்றவர்விதியா? என்று கேட்கின்றோம்.

மோசமான சுயநலக் கொள்கையிலிருந்து தேசம் விடுதலையடைய வேண்டி பாபரப்புக் கொண்டிருக்கும் இந்த நாளில், நாடார்களும் ஞாயம்தான் என்று நன்குதெரிவதி லுடன்பட்டு நாமும் நாடும் நலம்பெறவேண்டுமென்பதே நமதபிப்பிராயமன்றி மகாத்மா மீது நமக்கு வருத்தமில்லை. அவருடைய உயரிய நோக்கங்களை திரு. முதலியாரவர்களைப் போல் நமக் குடன்பாடாகக் கொண்டிருக்கின்றோம்.

## சுயமரியாதை இயக்கமும், மநு தர்ம நூலும்.

திருநெல்வேலியில் கூடிய சுயமரியாதை சங்கத்தார் “மநு ஸ்மிருதி” என்றுகூறப்படுகிற மநு அதரும நூலைத் தீ யிட்டுக் கொளுத்தியதற்காக, மத துவேஷத்தை அடக்கும் சட்டத்தின் படி நடவடிக்கை எடுத்து சிக்ஷிப்பதற்காகச் சென்னை, தம்பு செட்டி வீதி, 118 நிர், சங்கரம ஹாலில் திரு. ஸோம தேவசர்மா அவர்களின் தலைமையின் கீழ் ஒரு கூட்டங் கூடி, திரு. முத்துக் குமார செட்டியாரவர்கள் ஒரு மனு தயார் செய்து பலரிடமும் கையெழுத்துகள் வாங்கி சென்னை கவர்னருக்கும், லா மெம்பருக்கும் அனுப்ப வேண்டுமென்று தீர்மானித்திருப்பதாகத் தெரிகிறது.

மநு தரும நூல் விஷயத்தில் திரு. முத்துக்குமார செட்டியார் உண்மையாகவே ஆர்வத்துடன் வேலை செய்ய முன் வந்தாரா? அல்லது பூதேவர்களென்று சொல்லிக் கொள்ளுகிற பார்ப்பனப் பூசாரிகளின் உடுக்குச் சத்தத்துக்காக சபை முன் தலை விரித்தாடப் போகிறாரா? வென்பது தெரியவில்லை. திரு. முத்துக்குமார செட்டியார் உண்மையாகவே இம் முயற்சியில் ஈடுபடுவாரானால் “பிராமணரல்லாதாருக்கு மூளை கிடையாது” என்று திரு. ஓ. கந்தசாமி செட்டியாரவர்கள் முன்னொரு தடவை வெளியிட்ட அபிப்பிராயத்தை உறுதிப்படுத்தி விடவாரிந்து கட்டிக் கொண்டு வந்து விட்டாரென்று யூகிக்கும்படியா யிருக்கிறது.

திரு. செட்டியாரவர்கள் மநு தரும நூலை ஒரு தடவையாவது நன்றாய் வாசித்துப் பார்த்து அது ஒரு தரும நூல் தானா வென்பதையும், அந் நூல் பிராமணனுக்கு ஒரு நீதியும், பிராமணனல்லாதவனுக்கு ஒரு நீதியும் உரைப்பதால், அதை மத நூலாகக் கொள்ள இட முண்டா வென்பதையும், காய்தல் உவத்தலின்றி ஆராய்ந்து பார்த்து தமது உண்மையான அபிப்பிராயத்தைப் பத்திரிகைகளில் வெளியிடுவாரானால் அவருக்குப் பார்ப்பனரல்லாதார் நன்றியறிதலுள்ளவர்களா யிருப்பார்கள். தவிரவும், திருக்குறள், திருமந்திரம், தேவாரம், திருவாசகம் முதலிய நூல்களுக்கும், மநு தரும நூலுக்கும் உள்ள தாரதம்மியத்தையும் ஊன்றிக் கவனிக்க வேண்டுகிறோம்.

அஃதின்றி, பார்ப்பனர் போட்டு விட்ட வேஷத்துக்குத் தக்கபடி ஆடித் தீர வேண்டுமென்று அரங்க மேடையேறுவாரானால், அதனால் வரும் இழிவையும், சுயமரியாதை யின்மையையும் அவாது சந்ததியாருக்குத் தேடிவைத்த அவமானமாகவே உலகம் கருதி நகைக்குமென்று திரு. முத்துக்குமார செட்டியாருக்கு எச்சரிக்கை செய்கிறோம்.

நிற்க, சுயமரியாதை முயற்சியில் ஈடுபட்டுழைக்கும் அன்பர்களுக்கும் ஒன்று கூற விரும்புகிறோம். மநு தரும நூலைக் கொளுத்துவதாலேயே அந் நூலை அழித்துவிட முடியாது. அது நமக்குள்ள உணர்ச்சியைக் காட்டுவதற்குரிய சாதனமென்று தான் சொல்ல வேண்டும். அந் நூலை ஆதாரவாகக் கொண்டு நம் நாட்டில் ஏற்பட்டிருக்கும் சட்டங்களை ராஜாங்க சபையிலும், இந்திய சட்டசபையிலும் தீர்மானங்கள் கொண்டு வந்து திருத்தியும், ஷை சபைகளில் மநு தரும நூலின் தீமைகளை எடுத்துக் கூறி அந் நூலைப் பறிமுதல் செய்யும்படி சட்ட மியற்றும்படி செய்தும் அடியோடு அழிக்க வேண்டுமே யன்றி, வீணாகப் பணத்தைச் செலவிட்டுக் கொளுத்தி சோம்பேறிப் பார்ப்பனர்கள் புதிய புஸ்தகங்களை அச்சிட்டு லாபம் சம்பாதிக்க இடங் கொடுத்து விடக் கூடாது.

தவிரவும், பார்ப்பனர்கள் தற்காலத்தில் வருணாச்சிரம தரும மகாநாடுகளுக்கும், மதத்தின் பேரால் செய்யும் அட்டூழியங்களுக்கும் பார்ப்பனரல்லாத மக்களையே முன்னால் காட்டி வேலை செய்ய ஆரம்பித்திருப்பதால் அவர்கள் வலையில் விழுந்து அவமானமடைய முன் வரும் நமது சகோதர பார்ப்பனரல்லாதவர்களை சுயமரியாதையுடன் வாழும்படி செய்யத் தூண்டுவதற்கு மநு தரும நூல் அவசியம் வேண்டியதிருப்பதால் அந் நூலைக் கொளுத்தி வீணாக நமது பணத்தை இழந்து விட வேண்டாமென்று தெரிவித்துக் கொள்கிறோம்.

சம தர்ம வாதி.

## செய்தித்திரட்டு.

நமது வேல்ஸ் யுவ ராஜா அண்மையில் கிழக்காப்பிரிக்காவுக்குச் செல்வாராம்.

* *

ராயல் கமிஷன் பஞ்சாயத்தார் லண்டனினின்றும் வரும் ஜனவரி மீ 18 உ இந்தியாவுக்குப் புறப்படக் கப்பலேறுவார்களாம்.

* *

கனம் ப்டேல் நிர்மாணித்த கூர்ஜா நாட்டு வெள்ளக் கஷ்ட நிவர்த்தி நிதிக்கு இதுகாறும் 112000 ரூபாய் சேர்ந்திருக்கிறதாம்.

* *

இட்டாலி தேச மன்னர் சோதரர் ஸ்போலிட்டோ என்பவரின் தலைமையின் கீழ் ஒரு கூட்டத்தார் இமயமலையின் உச்சியில் ஏறுவதற்கு சமீபத்தில் வரப்போகிறார்களாம்.

* *

அரிகேசவ நல்லூர் முத்தையா பாகவதர் தசாராவின் போது மைசூர் அரண்மனையில் திறமையாய் கதை நடத்தி, மகாராஜாவால் ரூபாய் 2000 மும், அதிவிலையுள்ள வைரமோதிரமொன்றும் சன்மானம் அளிக்கப்பெற்றனர்.

* *

ஐதராபாத் அரசின் ஆதிகாரணரான நிசாமுல்முல்கின் பேரனும், பாரஸீகப் பழைய ஷா அரசர் பேரனுமான ஆலி மகமதுகான் என்பவர் ஒரு ஜாகீரைக் கொன்றுவிட்ட குற்றத்திற்கு மரணதண்டனையடைந்து, நிசாம் அரசர் உத்தரவின் பேரில் தூக்கிவிடப் படவிருக்கிறார்.

* *

கல்கத்தாவில் ஒரு நேப்பாளிக்குடும்ப வீட்டில் கோணிப்பைகள் தற்செயலாகத் தீப்பற்றிக் கொண்டதன் பயனாக வீடு முற்றும் தீப்பற்றி 3 மாதர், 5 குழந்தைகள், 10 மனிதர்கள், உயிரிழந்தனராம். இவர்கள் அன்று மறுதினம் ஊர்க்குப் பிரயாணம் வைத்திருந்தனராம். என்னே விதியின் பயன்!

* *

நம் இந்தியாவில் மிகப் பழமையான சிவ சொரூப விக்கிரகத்தின் ஓர் கண்ணில் பதிக்கப்பட்டிருந்த தெனக் கருதப்படும் ஓர் வைரக்கல், வாஷிங்டன் துறைமுகத்தில் 200,000 டாலர் விலை மதி பெற்றிருக்கிறதாம்.

* *

தூத்துக்குடியில் மருத்துவ குலப் பெண்ணொருவள் முத்துச்சிப்பிவாங்கி யறுத்ததில் ஒரு சிப்பியில் 5 ரூபாய் மதிப்புள்ள முத்தொன்று இருந்ததாம். அம்முத்தை ஒரு துணியில் வைத்து, தன் மருமகளிடம் கொடுத்து பந்தோபஸ்தாய் வைத்திருக்கும்படி சொல்லிப்போன பின் எப்படியோ அவள் வீட்டு நாய் அதை விழுங்கிவிட்டதாம். பின் அந்நாயை யறுத்து முத்தைக் கைக்கொண்டனராம்.

* *

26 வருடங்களுக்கு முன், ஸர். வில்லியவிம்ப்பென் என்றஒருபிரபல டாக்டர் மிகக்கொடிய வியாதியால் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்த ஒரு வியாதியஸ் தரிடமிருந்தெடுத்த ஓர் பூச்சியை ஓர் குழாயில் போட்டு நன்றாக மூடிவிட்டாராம். அதை இப்போது திறந்து பார்க்கையில் அப்பூச்சி உயிருடனேயே இருந்ததாம். அதன் விஷத் தன்மையும் கொடியதாகவே தெரிகிறதாம்.

* *

உலகமெங்கணும் மதுபானத்தையொழிக்கப் பிரசாரம் செய்து வரும் பூனைக்கால் ஜான்சனை ஆப்கன் அரசர் ஆமீர் அமனுல்லாகான் ஆப்கானிஸ்தானத்திற்கு அழைத்திருக்கின்றனராம்.

* *

ஆப்கன் அமீர் லாகிரிவஸ்து உபயோகிப்பது கிடையாது. அவரைப் பின்பற்றி அவருடைய உத்தியோகஸ்தர் பலர் நடக்கின்றனராம்.

* *

இந்து முஸ்லீம் ஒற்றுமைப்பற்றி ஆப்கன் அமீர் கராச்சியில் வலியுறுத்திப் பேசியிருக்கிறார்.

* *

இலங்கையில் பொல்வத்தை யென்னுமிடத்தில் பாண்டியா என்பவன் மாடு திருடுவதற்காக தன் ஊருக் கருகாமையான ஒரு இடத்திற்குப் போனதாகவும், போனவன் வெகுநேரமாயும் திரும்பக்காணேமே யென்று கூட்டாளிகள் தேடிப்போனதாகவும், தேடுங்காலையில் சேறு நிறைந்த ஒரு குட்டையில் அவன் ஒரு பெரிய எருமையின் கொம்புகளில் குத்திச் சிக் குண்டிறந்திருக்கக் கண்டதாகவும், அவ்வெருமை அம்மனிதப் பாரந்தாங்காமல் படுத்துக் கிடந்ததாகவும் தெரிய வருகிறது.

* *

அமெரிக்க மதுவிலக்குச் சட்டத்தை மீறிய குற்றத்திற்காக விதித்த மொத்த அபராதத்தொகை 8400000 பவுன். தண்டனை யடைந்தவர் 223000 பேர். தண்டனை வருஷங்கள் 225000.

* *

டிக்கன்ஸ் என்ற கீர்த்தி வாய்ந்த ஆங்கில நூலாசிரியர் எழுதிய ‘பாஸ்துமஸ் பேப்பர்ஸ் ஆப் பிக்விக்கிளப்’ என்ற புஸ்தக முதற் பதிப்புப் பிரதியொன்று நியுயார்க்கில் 16300 டாலருக்கு ஏலத்தில் போனதாம். இதற்கு முன்னர் இவருடைய புஸ்தகத்தின் முதற் பதிப்புப் பிரதியொன்று இங்கிலாந்தில் 8000 டாலருக்குப்போனதாம்.

* *

பட்டு வாக்காலி சரஸ்வதி பூஜை ஊர்வல வழக்கில், சுவாமி ஞானனந்தர் தமக்கேற்பட்ட அபராதம் ரூபாய் 10 செலுத்த மறுத்துச் சிறைவாசம் ஏற்றுக்கொண்டனராம்.

* *

சென்னை சைதாப்பேட்டை பாலத்தில் அஜாக்கிரதையாக மோட்டாரை ஓட்டிவர, மோட்டார் ஆற்றில் விழுந்து 5 பிரயாணிகள் இறந்து போனார்களாம். டிரைவருக்கு லைசென்ஸ் ரத்துசெய்து 6 மாதக் கடுங்காவல் விதிக்கப்பட்டதாம்.

* *

கும்பகோணம் பேட்டைத் தெரு சேவுப்படையாக்ஷி தன் தமையன் கோவிந்த படையாக்ஷியைக் குடும்ப மனஸ்தாபத்தால் குத்திக்கொன்று, தன் தமையன் பிள்ளையையும் காயப்படுத்தினதாக தஞ்சை ஸெஷன்ஸ் கோர்ட்டில் நடைபெற்றவழக்கில் எதிரி 10 வருடக் கடுங்காவல் தண்டனையடைந்தான்.

* *

1921-ம் வருஷ ஜனக்கணிதப்படி இந்தியாவில் 509000 ஐரோப்பியர்களிருக்கின்றனராம்.

* *

ஸ்ரீ| போலாக் அலகாபாத்திலிருந்து நாளிது டிசம்பர் மீ 23 உ பம்பாய் வந்திறங்குவாராம். சென்னையில் கூடவிருக்கும் காங்கிரஸுக்கு விஜயமாவாராம்.

* *

பம்பாயில் முனிஸிபல் தோட்டிகள் ஆங்கு கமிஷன் வரும் தினம் ஹர்த்தால் அனுசரித்து வேலை நிறுத்தம் போடத் தீர்மானித் திருக்கிறார்களாம்.

* *

பம்பாய் ஸ்ரீ வி. என். வாடியா பூனா பெர்கூஸன் காலேஜ் லைபிரேரி நிதிக்கு ஒரு லக்ஷம் ரூபாய் நன்கொடை கொடுத்திருக்கிறார்.

* *

ராஜப் பிரதிநிதி லார்டு இர்வின் மலேரியா சுரத்தால் வருந்துவதாகவும், ஆனால் நிலைமை கவலைக்கிடமில்லை யெனவும், இதனால் பம்பாய் அலுவல்களை யெல்லாம் நிறுத்தும்படியாகலாமெனவும் உத்தியோக முறையில் அறிவிக்கப்படுகிறது.

* *

மாஜி சென்னை சட்டசபை மெம்பரும், இராமநாதபுரம் ஜில்லாப் போர்டு மெம்பரா யிருப்பவருமான சிவகாசி ஸ்ரீமான் மொ. ஆ. சிதம்பரநாடாரவர்கள் பி. ஏ. பி. எல்., சிவகாசி பகுதி தீர்வாதிகாரக் கமிட்டி தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பெற்றிருக்கிறார்கள்.

Tamil Heritage Foundation International Digital Library EBook collection



(3-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

ராஜய்யர் மநு ஸ்மிருதியைக் கூடப் பார்த்திருக்க மாட்டாரென்பதும், பார்த்திருந்தால் வேணுமென்றே பிராமணரல்லாதாரை யேமாற்றப் பார்க்கிறாரென்பதும் நாம் கீழே குறிப்பிடும் மநு ஸ்மிருதியின் சுலோகங்களே மெய்மைப்படுத்தும்.

மநுஸ்மிருதி 1-வது அத்தியாயம், 1-வது சுலோகம்.

"பஞ்ச விடங்களிற் செல்லாவின்ற மதைப் பிரம நிஷ்டையிற் செல்லும்படி செலுத்திய சுவாயம்பு மநுவை ருஷீஸ்வரர்கள் வந்தடைந்து விதிப்படி பூசித்து மேற் சொல்லப் போகிற விஷயங்களைக் கேள்க்கிறார்கள்".

ஷை 2-வது சுலோகம்.

"பரிபூரணமான ஞானம், பலம், ஐஸ்வரியம், வீரியம், சக்தி, தேஜசு இவைகளை இயல்பாகவுடைய ஓய் சுவாமீ! பிராமண க்ஷத்திரிய வைசிய சூத்திர ரென்கிற நான்கு வருணத்தாருடையவும் அநுலோமன், பிரதிலோமன், அந்தராளன், விராத்தியன் முதலான சங்கர சாதிகளுடையவும் சாதகர்மம் முதலிய தருமங்களை கிரமமாகச் சரியாய் முழுமையும் எங்களுக்குச் சொல்ல வேண்டும்".

மநு 1-வது அத்தியாயம், 32-வது சுலோகம்.

"அந்தப் பிரம்மாவானவர் தன்னுடைய தேகத்தை இரண்டு கண்டமாக்கி ஒன்று ஸ்திரீயாகவும், ஒன்று புருஷனாகவும் ஆக்கி அந்த ஸ்திரீயினிடத்தில் அந்தப் புருஷனாகிய தானே புணர்ந்து விராட் புருஷனை உண்டு பண்ணினார்".

ஷை அத்தியாயம், 33-வது சுலோகம்.

"அந்த விராட் புருஷனும் தவஞ் செய்து இந்த உலகத்தை விசேஷமாய்ச் சிருஷ்டிக்கும் பொருட்டு யாதொருவனை உண்டு பண்ணினாரோ அவன் நானென்றறியுங்கள்".

மேற் காட்டியிருக்கிற 1, 2-வது சுலோகங்கள் சில ரிஷிகள் சுவாயம்பு மநுவைக் கண்டு கேட்பதும், 33-வது சுலோகம், சுவாயம்பு மநுவானவர் பிரம்மாவினால் உண்டாக்கப்பட்ட விராட் புருஷனுடைய பிள்ளை யென்பதையும் தெளிவாய் விளக்கி யிருக்கின்றன. இங்ஙனமிருக்க பம்பாய் "இந்தியன் டெயிலி மெயில்" ஆசிரியர் திரு. நடராஜய்யர் மநு பிராமணரல்லாதாரென்று சொல்வதின் கருத்தென்ன? இங்கிலீஷ் படித்தவர்களிடத்திலும், இங்கிலீஷ் காரர்களிடத்திலும் பிராமணரல்லாதாரியக்கம் அறியாமையால் சில துவேஷிகளால் நடத்தப்படுகிறதென்று காட்டி பிராமணரல்லாதாருக்குக் கேடு சூழவா? அல்லது கண்ணிருந்தும் குருடர் என்பது போல அறியாமையால் குறிப்பிட்டாரா? பேஷ்! பேஷ்!! இவர் தானையா ஆசார சீர்திருத்தக்காரர். இவரது சொல்லும் செயலும் எத்துணைச் சிறப்புடைய தென்பதை அன்பர்களே தெளிந்து கொள்ள வேண்டியதுதான்.

## மதமும், தேவ தாசிகளும்.

இந்தியாவிலுள்ள ராஜீயக் கட்சியார்களில் தாங்கள் தான் கட்டுப்பாடும், செல்வாக்கும் விடுதலையில் ஊக்கமும் உள்ள கட்சியாரென்று கூறிக் கொள்வது சுயராஜ்ஜியக் கட்சிப் பிராமணர்களின் இயல்பு. இந்து தேவஸ்தான பரிபாலன சட்டத்தை ஜஸ்டிஸ் கட்சியார் மந்திரிகளா யிருக்கும்போது முதல் மந்திரி திருவாளர். பனகால் ராஜா அவர்கள் சென்னை சட்டசபையில் கொண்டுவந்த போது திரு. சத்தியமூர்த்தி சாஸ்திரிகள் தமது சகாக்களாகிய பிராமணரல்லாதார் சகாயத்துடன் கவர்ன்மெண்டு மதத்தில் புகுந்து கொண்டால் இந்து மதமே அழிந்து போய்விடுமென்று கூப்பாடுபோட்டதும் அவருக்குப் பல மடாதிபதிகள் திரவிய சகாயஞ் செய்து எவ்விதமாவது மசோதா பாஸாகாமல் செய்யப் பிரயத்தனப்பட்டதும் நாடறிந்த ரகசியம். இதுவரையும் மூன்று வருஷமாகியும் தேவஸ்தானங்களாவது, மடங்களாவது, இந்து மதமாவது அழிந்துபோகவில்லை. ஆனால் பல தேவாலயங்களில் திபத்துக்குக் கூட திண்டாட்டமாயிருந்தது நீங்கி இப்போது விளக்குகள் மங்காமல் எரியக் கூடிய நிலைமைக்கு வந்திருப்பதாய்த் தெரிகிறது.

இப்போது இந்திய உத்தம ஸ்திரீரத்தினமாய் சென்னை சட்டசபை உப தலைவராக வீற்றிருக்கும் திருவளர் செல்வி டாக்டர் முத்துலக்ஷ்மி யம்மாள் அவர்கள் சென்ற சென்னை சட்டசபைக் கூட்டத்தில் கொண்டு வந்து நிறை வேறிய மதத்தின் பேரால் பொட்டுக் கட்டுதல் என்ற வழக்கத்தை நிறுத்தி விடும்படி சட்டஞ் செய்ய வேண்டு மென்ற தீர்மானம் அனுப்பியது முதல் திரு. எஸ். சத்தியமூர்த்தி கூட்டத்தார் மதம் போச்சு என்று கூப்பாடு போட ஆரம்பித்தார்கள். முன்னொருதரம் மதம் போச்சே! இப்போது மதம் எங்கே போச்சு என்ற விபரந்தான் நம்மால் அறிந்து கொள்ள முடியாமலிருக்கிறது. சிவ, விஷ்ணு ஆலயங்களில் சில பெண்களுக்குப் பொட்டுக் கட்டுதலென்ற சடங்கு நிறை வேற்றுவதும், அப்பெண்களை அங்குள்ள பட்டர் என்கிற பார்ப்பனப் பூசாரிகள் முதலில் அங்குள்ள சுவாமிகளுக்குப் பிரதிநிதியாய்ச் சாந்தி முகூர்த்தஞ் செய்வதும், அது முதல் அந்த தேவ தாசிகள் ஆலயத்தில் பணி விடை செய்வதாய்ப் பாவனை செய்து கொண்டு அங்கு சுவாமி தெரிசனத்துக்கு வருவார் போவார்களை யெல்லாம் காமச் சேற்றில் தள்ளி காசு பறிப்பதும், "பிள்ளைவரத்துக்குப் போய் புருஷனைப் பறி கொடுத்தது போல" சுவாமி தெரிசனம் காமி தெரிசனமாகி ஆலய வழி பாடே அலங் கோலக் காட்சியாய் வெள்ளை, வெட்டை, அரையாப்பு முதலிய மேக ரோகங்களால் ஆணும் பெண்ணும் அவதிப்பட்டு கூட்டோடு கைலாசம் என்பது போல் நடைப் பிணமாய்க் கிடந் துழல்வதை இன்னும் நேரில் காணலாம்.

இவைகளை யெல்லாம் நேரிலோ அல்லது விசாரணை மூலமோ தெரிந்து தான், மிஸ். மேயோ போன்ற அந்நிய நாட்டினர் நமது ஜனங்களைப் பற்றி தூற்றுதல் செய்து புஸ்தகங்களை வெளியிட்டு வருகிறார்கள். மிஸ். மேயோவையும், அவருடைய புஸ்தகத்தையுங் கண்டிக்க முன் வருவதில் சத்தியமூர்த்தி கூட்டத்தார் பின் வாங்குவதில்லை. அவ்வித பிரசாரத்துக்குக் காரணமான குறைகளைக் களைய வேண்டு மென்று மகாத்மா காந்தியடிகளும், மிஸ். மேயோவின் "இந்தியத் தாய்" என்ற நூலைப் பற்றிய அபிப்பிராயத்தில் நவின்றிருக்கின்றார். ஆனால் திரு. சத்தியமூர்த்தி கூட்டத்தாருக்கு. இது கூடச் செய்ய மனம் வரவில்லை. பொட்டுக் கட்டுதல் மத விஷயமாம். சிவாகமங்களில் சுவாமிக்குச் செய்ய வேண்டிய சோடச உபசாரத்தில் நிருத்தமும் ஒன்றாகச் சொல்லப்பட்டிருக்கிறதாம். உண்மை தான்; நாமும் அதை ஒப்புக் கொள்ளுகிறோம். ஆனால் அதைச் செய்ய வேண்டிய பொறுப்பு யாருடைய தென்பதே கேள்வி. பிராமணரின் வருண தருமப்படி பிராமணனே பூசை செய்ய வேண்டு மெனில், அவன் செய்யும் 15 வித உபசாரத்தோடு அவரினத்துப் பெண்களே நிருத்தம் என்னும் 16-வது உபசாரத்தையுஞ் செய்து விட வேண்டியதுதான் ஞாயம். அவ்விதமிருக்க அதை மாத்திரம் பிராமணரல்லாதார் செய்ய வேண்டு மென்று சொல்வதின் காரண மென்ன? இங்கே மத மில்லையா? வருண தரும மில்லையா? என்னே இவர் தம் மதப் பித்து! பூர்வீக வழக்க மெனின், இவர் கூற்றுக்கு ஆதாரமில்லை யென்றே சொல்வோம். பூர்வ தமிழ் நூல்களில் பரத்தை அல்லது விலை மாதரைப் பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது. அவர்களுக்கு தேவாலயங்களில் பொட்டுக் கட்டுவதாகக் கண்டிலோம். தீய வழக்க மொன்று மதத்தின் பேரால் செய்வதற்குச் சம்மதிக்கும் பார்ப்பன ராஜீய வாதிகளாகிய சத்தியமூர்த்தி கூட்டத்தாரின் சொல்லும், செயலும் எத்துணை முன்னேற்றமுடைய தென்பதை வாசகர்கள் அறிந்து கொண்டு ராஜீயக் கூட்டத்திலிருந்து அவர்களை ஒதுக்கிவிட வேண்டிய காலம் வந்து விட்டது. இனியாவது பிராமணரல்லாதார் கண் விழித்துக் கொண்டு தீமைகளை யொழிப்பதில் சிரத்தையோடு வேலை செய்ய வேண்டியதுடன் தாங்களும் தங்கள் சகோதரர்களை சம தருமத்தோடு நடத்தி தேச முன்னேற்றத்தையும், சுயமரியாதையையும் நாடும்படியே வேண்டுகிறோம்.

சம தரும வாதி.

---

## காந்தியடிகளும், தமிழ்நாடும்.

காந்தியடிகளின் தமிழ்நாட்டுச் செலவு முற்றுப் பெற்றது. அவரது இலங்கைச் செலவையும் தமிழ் நாட்டுடன் சேர்த்தே கூறுகிறோம். இம்முறை மிக நெருக்கடியான வேளையில் மகாத்மா தமிழ் நாட்டைச் சுற்றி வந்தார். ஒத்துழையா இயக்கம் ஒடுங்கி விட்டமையான், அடிகட்கு நாட்டில் செல்வாக்கில்லை யென்று சில பெருந் தலைவர்கள் கருதினார்கள். சிலர் வேறு சில காரணங்கொண்டு மகாத்மாவைத் தாக்கினர். முடிவில் காந்தியடிகள் வெற்றியுடன் திரும்பினார். கதர் நிதிக்குத் தமிழ் ஜில்லாக்களிலும், இலங்கையிலும் ஏறக்குறைய மூன்று லட்சம் சேர்ந்தமை கவனிக்கத்தக்கது. இத்தொகை எதிர் பார்த்ததை விடப் பெரிய தொன்றே. இதனால் காந்தியடிகளின் பயன் கருதாத் தொண்டினது திட்பம் புலனாகிறது.

ஒத்துழையா இயக்கத்துடன் மகாத்மாவின் செல்வாக்கும் ஒடுங்கிற்று என்று கருதுவோர் நிலை குறித்துப் பெரிதும் இரங்குகிறோம். சில தலைவர்கள் ஓர் இயக்கத்தில் செல்வாக்குப் பெறுதலுண்டு. அவ்வியக்கம் ஒடுங்கும் போது அவர் செல்வாக்கும் ஒடுங்குவது வழக்கம். இஃது அரசியல் கிளர்ச்சி யுலகின் இயல்பு. நம் பெருமான் காந்தியடிகள் வெறும் அரசியல் கிளர்ச்சியில் தலைப்பட்ட காரணத்தால் பேரும் புகழும் பெற்றவரல்லர். அவர் பேரும் புகழுங்கடந்த ஆத்மசக்தி யுலகில் வாழ்பவர். அவரைத் தற்கால அரசியல் கிளர்ச்சிக் கூட்டத்தில் சேர்ப்பது அறியாமை. "நாடவர் பழித்துரை பூணதுவாக" என்னும் மணிவாசகத்துக்கு இலக்கியமாக விளங்குபவர் நமது அடிகள் என்பதை அரசியல் கிளர்ச்சிக்காரர் உணர்வார்களாக. ஆத்மசக்தி யுலகில் வாழும் ஒருவர் முயன்று செல்வாக்குத் தேடவேண்டுவதில்லை. மின்சாரம் போல அவர் பேரும் புகழும் பரவி என்றும் நிலைத்திருக்கும்.

காந்தியடிகள் சென்றவிடமெல்லாம் அவரைக் கன்று மனம்போலக் கசிந்து கசிந்து அடியார்கள் போற்றியதும், கதர் நிதிக்குப் பொருள் தூற்றியதும் அடிகளின் ஆத்ம சக்திக்கு அறிகுறியேயாகும். இலங்கையில் எதிர்பார்த்ததற்குமேல் அடிகளுக்கு வரவேற்பு நல்கப்பட்டது. கதர் நிதிக்குப் பொருளும் உதவப்பட்டது. தமிழகத்திலும் இலங்கையிலும் அடிகளைப் போற்றி நிதியளித்த எல்லா அன்பர்கட்கும் நமது நன்றியறிதலான வணக்கம் உரியதாக.

காந்தியடிகள் தமிழ்நாடு போந்திருந்தவேளையில் இம்முறை அவர் பெரிதும் கடவுள் நெறி பற்றிய சொற்பொழிவுகளையே நிகழ்த்திச் சென்றார்கள். அவர் சொற்பொழிவுகள் பெரிதும் "நவசக்தி"யில் அவ்வப்போது வெளியிடப் பட்டன. அவைகளைப் பற்றிய கருத்து வேற்றுமை பெரிதுமில்லை.

இம்முறை அடிகள் பல விடங்களில் வருண தருமத்தை வலியுறுத்திப் பேசினார்கள். அது குறித்துப் பலதிறக் கருத்து வேற்றுமைகள் நாட்டில் உலவி வருகின்றன. அப்பொருள்பற்றிப் பல கடிதங்கள் எமக்கு வந்தன. எமது உள்ளக் கிடக்கையையுஞ் சிலர் விழைந்து முடங்கல் தீட்டியுளார்.

பிறப்பில் உயர்வு தாழ்வு கருதல் கூடாது என்று அடிகள் கூறிவருவதைக் கொண்டு சிலர், அடிகள் வருண தர்மத்தை மறுப்பவர் என்று கருதிக் கொண்டிருந்தார். உயர்வு தாழ்வைப் பற்றி அடிகள் கொண்ட கொள்கையில் இப்பொழுதும் எத்தகை மாற்றமும் நிகழவில்லை. பிறப்பில் உயர்வு தாழ்வு கருதல் கூடாது என்றே இன்னும் அடிகள் அறைந்து வருகிறார். ஆனால்:—

தொழில் முறைகள் பிறப்பை யொட்டி நடைபெறல் வேண்டுமென்பது காந்தியடிகள் உட்கிடக்கை. உழவோனுக்குப் பிறந்த ஒருவன் உழவு தொழில் செய்தல் வேண்டுமென்றும், நெய்யல்காரனுக்குப் பிறந்த ஒருவன் நெய்யல் வேலைசெய்தல் வேண்டுமென்றும், இங்ஙனே பிறதொழில் முறைகளும் பிறப்பை யொட்டியே நடைபெறல் வேண்டுமென்றும் மகாத்மா காந்தி கூறுகிறார். ஆனால் இத்தொழிலின் முறை வேற்றுமை கருதிப் பிறப்பில் உயர்வு தாழ்வு கருதல் கூடாதென்பதைக் காந்தியடிகள் வலியுறுத்துகிறார். வேதம் ஓதல் திருக்கோயில் பூசை முதலியன எல்லோருஞ் செய்யலாமென்பது அடிகள் கருத்து. இன்னோரன்ன பொருள்பற்றித் தமிழ்நாட்டில் பலவிடங்களில் பலர் வாதஞ் செய்தனர். அவ்வாதங்களிடை எழுந்த வினாக்கள் பல. அவ்வினாக்களுள் இரண்டு ஈங்கு சிந்திக்கத்தக்கன. ஒன்று பிராமணனாகப் பிறந்த ஒருவன் பிராமண தருமத்துக்கு முற்றும் மாறாக நடப்பானால் அவன் பிராமணனல்லாதவனா என்பது, மற்றொன்று பிறப்பில் பிராமணனல்லாத ஒருவன் பிராமண தர்மத்தை அனுஷ்டிப்பானேல் பிராமணனாவனா என்பது. இவ்விரண்டு வினாக்கட்கும் அடிகள் இறுத்திய விடைகளான் அவர் உள்ளக் கிடக்கை தமிழ் நாட்டவர்க்குச் செவ்வனே புலனாகியிருக்கும்.

இந்நாளில் பிராமணர் பலர் தமக்குரிய அறத்தினின்றும் வழுவி நிற்றல் உண்மையென்றும், வழுவினும் அவர் பிராமணரல்லாதவராகாரென்றும், அவர் மறு பிறப்பில் பிராமணரல்லாதவராகப் பிறப்பரென்றும், பிராமணரல்லாத ஒருவன் பிராமண தருமத்தை வினழுந்து அநுட்டித்துவரினும், அவன் பிராமணனாகான் என்றும், அவன் இன்னொரு பிறப்பிலேயே பிராமணனாவன் என்றும் அடிகள் விடை யிறுத்திருக்கிறார். அடிகள் கொண்டுள்ள இக் கருத்துக்கு நாம் முற்றும் மாறுபடுகிறோம். "பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா செய்தொழில் வேற்றுமையான்" என்னுந் திருவள்ளுவர் கொள்கை யுடையேம் நாம்.

தொழிலின் முறைகள் இயல்பாக அமைந்திருக்கின்றன. எவரெவர் எவ்வெத்தொழிலின் முறைகளின் இயல்புக்குரியராய்ப் பிறக்கின்றனரோ அவரவர் அவ்வத் தொழிலின் முறைகளை ஏற்பர். அக்கடனை ஆற்றவேண்டிய பொறுப்பு இயற்கை அன்னையினுடையது. இவன் இத்தொழிலைச் செய்ய வேண்டுமென்று கட்டுப்படுத்த மற்ற எவர்க்கும் உரிமையில்லை.

மற்றுமொன்று. பிராமண தர்மத்துக்கு மாறுபட்ட பிராமண குலத்தான் மறு பிறப்பில் பிராமணனல்லாதவனாகப் பிறப்பன் என்பதும், ஒழுக்கத்திற் சிறந்த பிராமணனல்லாத ஒருவன் இன்னொரு பிறப்பில் பிராமணனாகப் பிறப்பான் என்பதும் போற்றற்குரியனவல்ல. இக்கருத்து பிராமணனல்லாத பிறப்பு தண்டனைக்குரிய தொன்று என்பதைத் தெரிவிக்கிறது. ஆனால் காந்தியடிகள் இவ்வாறு கருதுகிறாரில்லை. பிறப்பில் உயர்வு தாழ்வு இல்லை என்பது அவர் கருத்து. வருண தர்மத்தைப்பற்றி அவர் ஒரு வித கொள்கை பூண்டிருக்கிறார்.

பிறப்பில் எத்தகை வேற்றுமையுமிருத்தல் கூடாது. இங்ஙனே உலகம் இயங்கிவருகிறது. உலகில் போதனை, அரசு, வாணிபம், உழவு முதலியன யாண்டில்லை? யாண்டுமிருக்கின்றன. அவ்வவ்வியல்பினோர் அவ்வத்தொழின் முறையேற்க இயற்கை வழி வகுத்திருக்கின்றது. இத்தொழின் முறைகட்குப் பிறப்பு யாண்டும் வகுத்தில்லை. இந்தியாவில் ஹிந்து மதத்தில் இப்பிறப்புரிமை பேசப்படுகிறது. இக்காரணத்தால் இந்தியாவும் ஹிந்து மதமும் எந்நிலையிலிருக்கின்றன என்பது வெள்ளிடைமலை. இது குறித்து ஈண்டு விரித்தோத வேண்டுவதில்லை.

வருண தர்மத்தைப்பற்றி அடிகளுடன் மாறுபடுஞ் சிலர் அவரைப் பலவாறு தாக்குகிறார். அஃது அறமன்று. அவரவர் கருத்தை அவரவர் வெளியிட அவரவர்க் குரிமையுண்டு. மாறுபட்ட கருத்தொன்று ஒருவரிடம் வெளிவந்ததும் அவரைக் குறை கூறுவது அறியாமை. அடிகளின் தியாகம், அஹிம்ஸா தர்மம், உண்மை, காவிலா நெஞ்சம், கடவுளிடத்துறுதி, பிறர் குற்றம் பாராட்டாமை முதலிய தெய்விக நீர்மைகள் எம்மை ஆட்கொண்டிருக்கின்றன. இவைகளைப்பற்றி அடிகள் வழிநின்று தொண்டு செய்வது எமது கடன். வருண தர்மத்தில் அடிகள் கருத்துடன் மாறுபடும் ஏனைய அன்பர்களையும் உளப்படுத்தி இவ்வாறு கேட்டுக் கொள்கிறோம். காந்தியடிகள் வாழ்க; தமிழ்நாடு வாழ்க; அஹிம்ஸா தர்மம் ஓங்க.

"நவ சக்தி"

---

Tamil Heritage Foundation International Digital Library EBook collection



## சுயமரியாதைத் தீர்மானங்கள்.

[திருநெல்வேலி ஜில்லா சுயமரியாதை மகாநாட்டில் ஸ்ரீமான் நாயக்கர் அவர்கள் தலைமையில் நிறைவேறின.]

1. மாஜி நீதிபதியும், அறநிலைப் பாதுகாப்புக் கழகத் தலைவரும், மக்கள் பொது நலத்திற்குழைத்த பெரியாருமாகிய சர். டி. சதாசிவ அய்யரவர்கள் காலஞ் சென்றமை குறித்து இம்மகாநாடு அனுதாபத்தைத் தெரிவிக்கிறது.

2. (அ) இந்துக்கள் என்று சொல்லப்படுகிறவர்களுக்குள் ஒரு வகுப்பாரை "சூத்திரன்" என்று சொல்வது மிகவும் கொடுமையாயும், அக்கிரமமாயும் இருக்கிறபடியால் அவ்வகையான வார்த்தையை யாரும் எந்தச் சமயத்திலும் உபயோகப்படுத்தக் கூடாதென்று இம்மகாநாடு தீர்மானிக்கின்றது.

(ஆ) அரசியல் சட்டப் புத்தகங்களிலும் வேறு பல ஆதாரங்களிலும் "சூத்திரர்" என்ற வார்த்தை இருக்கக் கூடாதென்பதோடு சூத்திரருக்கு வேறு நீதி, பார்ப்பனருக்கு வேறு நீதி என்பதாக ஒரு வகுப்புக்கு ஒரு நீதி என்னுள்ள சட்டங்களை யெல்லாம் மாற்ற வேண்டுமென்று தீர்மானிக்கிறது.

(இ) சென்னை ஜாசாங்க இலாகா முதன் மந்திரி சமீபத்தில் சட்டசபையில் காட்டிய ஒரு ஆதாரத்தில் "சூத்திரன்" என்கிற பதத்தை உபயோகித்திருப்பதைக் குறித்து இம்மகாநாடு வருந்துகிறதுடன் அதனை உடனே மாற்றவேண்டுமென்று கேட்கிறது.

3. புகைவண்டி நிலயங்களில் இந்து மக்களுக்கென்று ஏற்படுத்தப்பட்டிருக்கிற உண்டிச் சாலைகளில் பார்ப்பனர்—பார்ப்பன ரல்லாதார் என்று பாகுபாடு செய்திருப்பதானது பார்ப்பனரல்லாத மக்களின் சுயமரியாதைக்கு மிக்கதொரு அவமானத்தை விளைவிப்பதால் அவ்வகையான வேற்றுமையை ஒழிக்கும்படி புகைவண்டி யதிகாரிகளைக் கேட்கிறது.

ரயில்வேக் காரர்களால் ஏற்படுத்தப்பட்டிருக்கிற உண்டிச்சாலைகளில் பார்ப்பனர்கள் மாத்திரமே சமையல் செய்கிறவர்களாயிருந்து வருகிற வழக்கத்தை மாற்றி விடுமாறு ரயில்வே அதிகாரிகளைக் கேட்டுக்கொள்கிறது.

4. முனிசிபல் எல்லைக்குள்ளிருக்கிற ஒவ்வொரு உண்டி—சிற்றுண்டிச் சாலைகளுக்கும் அந்தந்த முனிசிபல் சேர்மனவர்களால் கொடுக்கப்படுகிற லைசென்ஸ் உத்தரவில் பார்ப்பனர்—பார்ப்பனரல்லாதார் என்று பேதப்படுத்தி இடங்களை வேறு வேருகப் பிரித்து இருக்கக் கூடாதென்று நிபந்தனை ஏற்படுத்துவதுடன் முந்தி கொடுக்கப்பட்டுள்ள உத்தரவுகளிலும் மேலே கண்டபடி திருத்திக் கொடுக்க வேண்டுமாய் ஒவ்வொரு முனிசிபல் சேர்மெனவர்களையும் இம்மகாநாடுகேட்டுக்கொள்கிறது.

5. வருணாச்சிரமம் என்று சொல்வது மனித சமுகத்திற்கே பொருத்தமற்றதும் குறிப்பாகத் தமிழ்நாட்டு மக்களை பிரித்துவைத்துக் கொடுமைப் படுத்துவதற்கும் உபயோகப் படுவதாயிருக்கிறபடியால் எந்த அர்த்தத்திலும் நாம் அதை ஏற்றுக்கொள்ளக் கூடாதென்றும், வர்ணாச் சிரமத்தை ஆதாரமாகக் கொண்ட மனுதர்ம சாஸ்திரம் முதலிய ஆதாரங்களை அடியோடு ஒழித்துவிட வேண்டுமாயும் இம்மகாநாடு முடிவு செய்கிறது.

6. மகாத்மாகாந்தி தென்னாட்டு சுற்றுப்பிரயாணத்தில் தமிழ் மக்களுக்கு வர்ணாச்சிரமத்தைப் பற்றி சொற்பொழிவு செய்ததையும், விரிவுரை செய்ததையும் ஒப்புக்கொள்ளாததோடு, "சூத்திரன்" என்ற வார்த்தையை உபயோகித்ததையும் உரமாய்க் கண்டிக்கிறது.

7. இந்து சமுகத்திற்குச் சம்மதப்பட்டதென்று சொல்லப்படுகிற கோயில், குளம், சத்திரம் முதலிய எல்லா விடங்களிலும் இந்து மதத்தைச் சேர்ந்தவர் களென்று சொல்லப்படுகிற எல்லா மக்களுக்காவது சம உரிமை கொடுக்கப்படவேண்டுமென்று இம் மகாநாடு முடிவு செய்கிறது.

8 கோயில்களில் கடவுளை வழிபடுகிறதற்கு இடையில் தரகர்கள் வேண்டியதில்லையென்றும் ஒவ்வொருவருக்கும், நேராகவே கடவுளை வந்தன வழிபாடு செய்து பூசனை புரிவதற்கு உரிமையுண்டென்றும், அதனை இது முதலே ஒவ்வொருவரும் நடவடிக்கைக்குக் கொண்டுவர வேண்டுமென்றும் இம்மகாநாடு முடிவு செய்கிறது.

9. எந்த இலாக்காவின் அதிகாரிகளும் தமக்குக் கீழ்ப்பட்ட உத்தியோகஸ்தர்களுக்கு நியமன சம்பந்தமாய் சிபார்சு செய்தல் கூடாதென்று தன்னுடைய கவர்ன்மெண்டு உத்தரவு பிறந்த பிறகும் நீதி இலாக்காவின் தலைவர் சர். ஸி. பி. ராமசாமி அய்யர் சென்னை மாகாண உயர்தர நீதி மன்ற வெள்ளைய ஜட்ஜ் ஒருவருக்கு தனக்கு வேண்டிய ஒரு பார்ப்பனரை முன்சிப் ஜாப்தாவில் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கடித மனுப்பியதை இம்மகாநாடு கண்டிப்பதோடு கூட சென்னை சட்டசபை பார்ப்பனரல்லாத அங்கத்தினர்களை அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை ஏகமனதாய் நடத்தும்படி இம்மகாநாடு கேட்டுக் கொள்ளுகிறது.

10. இந்துக் குடும்பங்களில் கணவர் இறந்த பிறகு மறுமணம் செய்துகொள்ள விருப்பமில்லாத பெண் மக்களுக்கு தங்கள் கணவரால் பயன்படுத்தி வந்த சொத்துக்களின் உரிமை கொடுக்கப்படவேண்டு மென்று முடிவு செய்கிறது.

11. இந்து சமுகம் என்று சொல்லப்படும் குடும்பச் சொத்துக்களில் பெண்மக்களுக்கும் ஆண்மக்களுக்கு ஒத்த சொத்துரிமை கொடுக்கப்பட வேண்டுமென்று முடிவு செய்கிறது.

12. நாட்டில் சாதிமத வேற்றுமைகளிருந்து வரும் வரை ஒவ்வொரு சாதிமதத்தினருக்கும் வகுப்புவாரி பிரதிநிதித்துவம் கிடைக்க வேண்டுமென்று இம்மகாநாடு கேட்டுக் கொள்ளுகிறது.

13. பார்ப்பனரல்லாதாரின் ஆதிக்கத்தில் இருக்கிற இலாக்காக்களில் உள்ள சகல உத்தியோகங்களிலும் 100-க்கு 90 வீதம் பார்ப்பனரல்லாதாரையே நியமுகம் செய்யும்படி இம் மகாநாடு அவ்விலாக்காக்களின் தலைவர்களைக் கேட்டுக்கொள்கிறது.

14. கல்வியிலாக்காக்களில் உபாத்தியாயர்களும், உத்தியோகஸ்தர்களும் பெரும்பாலும் பார்ப்பனர்களாயிருப்பதால், பார்ப்பனர்களின் கொள்கைப்படிக்கே பார்ப்பனரல்லாத மாணவர்களின் கல்வி முன்னேற்றத்திற்குப் பெருந்தடையாயிருக்கிறது. அவ்விதம் தடைபடாமலிருப்பதற்கு பார்ப்பன ரல்லாதவர்களை 100-க்கு 90-க்குக் குறையாமலிருக்கும்படி உத்தியோகஸ்தர்களையும், உபாத்தியாயர்களையும் நியமனம் செய்ய வேண்டுமென்றும், டீச்சர்ஸ் டிரெயினிங் ஸ்கூல்களில் 100 க்கு 90 வீதம் பார்ப்பனரல்லாதாரையே அவசியம் சேர்த்துக்கொள்ள வேணுமாயும் அந்தந்த இலாக்கா அதிகாரிகளை இம் மகாநாடு கேட்டுக் கொள்கிறது.

15. இந்த ஜில்லாவில் ஒவ்வொரு தாலுகாவிலும் ஒவ்வொரு பெரிய ஊரிலும் சுயமரியாதைச் சங்கங்கள் ஏற்படுத்த வேண்டுமென்று இம்மகாநாடு கேட்டுக்கொள்ளுகிறது.

16. பார்ப்பனரல்லாத மக்களுக்கு நேரானமுறையில் பகிரங்கமாய் சுயமரியாதை உணர்ச்சியை வளர்த்து வரும் "ஜஸ்டிஸ்" "திராவிடன்" "குடி அரசு" "குமரன்" முதலிய பத்திரிகைகளைக் கட்டாயமாய் ஒவ்வொருவரும் ஆதரிக்க வேண்டுமென்று இம்மகாநாடு வேண்டிக்கொள்கிறது.

17. அரசாங்க வைத்திய சாலைகளில் பார்ப்பனர்களுக்குத்தனி வார்டுகள் ஒதுக்கிவைப்பதை பலமாய்க் கண்டிக்கிறது.

18. வைக்கம் வீரரான உயர் திரு. ஈ. வெ. இராமசாமி நாயக்கரவர்கள் பார்ப்பனரல்லாத சமுகத்தார் தங்களின் சுயமரியாதையைக் காக்க கண்ணைத்திறந்து விட்டு எல்லா வழிகளிலும் அவர்களின் சமுதாய நிலையை உயர்த்த பெரும்பாடுபட்டு வருவதைப் பாராட்டி நன்றி செலுத்துகின்றது.

19. சென்னை கார்ப்பொரேஷனில் சமீபத்தில் நடந்ததேர்தலில், பார்ப்பனர்கள் பார்ப்பனரல்லாதார் ஒருவரும் தலைவராக வரக்கூடாதென்று செய்த சூழ்ச்சிகள் அனைத்தும் பார்ப்பனரல்லாத மக்களுக்கு நன்றாய் விளங்கிவிட்ட படியால் பார்ப்பனரல்லாதார் ஒவ்வொருவரும் தங்களுடைய ஓட்டுரிமைகளை எந்த ஸ்தாபனங்களிலும் பார்ப்பன ரல்லாதார்களுக்கே கொடுத்துத் தேர்ந்தெடுக்கும்படி இம் மகாநாடு வேண்டிக்கொள்கிறது.

20. கடவுள் பெயராலும், மதத்தின் பெயராலும் பெண்களுக்குக் கோயில்களில் பொட்டுக்கட்டி, பொது மகளிராக்குவது இந்து சமுகத்திற்கே பெரிய அவதூறும், அவமானமும் உண்டுபண்ணுவதால் அவ்வகையான வழக்கத்தை நிறுத்த வேண்டுமென்று இம்மகாநாடு முடிவு செய்கிறது. இது சம்பந்தமாய் பண்டிதை திருமதி முத்துலட்சுமி அம்மாளவர்கள் செய்துவரும் முயற்சியை இம் மகாநாடு பாராட்டுகின்றது.

இம்முயற்சிக்கு கேடு கருதிவரும் திரு. சத்தியமூர்த்தி கூட்டத்தார் அறியாமையினாலும் தன்னலங்கருதியும் செய்துவரும் எதிர்ப்பேச்சுகளை இம் மகாநாடு மிகவும் உரமாய்க் கண்டிக்கிறது.

21. கிராமங்களில் அதிகமான பள்ளிக்கூடங்களும், சித்த மருத்துவச் சாலைகளும் ஏற்படுத்த வேண்டுமென்றும், ஆதிதிராவிடக் குழந்தைகளுக்குப் பள்ளிக் கூடங்களில் சம்பளம் ரத்து செய்யப்பட வேண்டுமென்றும் அரசினரை இம்மகாநாடு கேட்டுக் கொள்கின்றது.

22. சென்னை அரசினரால் தமிழ் அறிவியல் நூற்கள் எழுதிப் பாடமாக்க ஏற்பாடு நடைபெறுகின்றதில், அறிவியற் சொற்களெல்லாம் இதுகாறும் வடமொழி உருவாக அமைக்கப்பட்டு வந்திருப்பதை இம் மகாநாடு கண்டிக்கிறதோடு அறிவியற் சொற்களை யெல்லாம் தூய தனித்தமிழ் மொழியிலேயே அமைக்க வேண்டுமென்றும், தமிழில் அமைக்கக்கூடாத இடங்களில்மட்டும் பிற மொழிகளில் அமைக்கலாமென்றும் சென்னை கல்வி இலாக்கா மந்திரியவர்களுக்கு இம் மகாநாடு தெரிவிக்கிறது.

23. பார்ப்பனரல்லாத கூட்டத்தாருள் சடங்குகளில் நம்பிக்கை இருக்கிறவர்கள் பிறவியில் உயர்வு—தாழ்வு என்கிற வேற்றுமையில்லாத பெரியவர்களைக்கொண்டு தமது சடங்குகளை தமிழ்மொழியில் நடத்திக் கொள்ள வேண்டுமென்று இம்மகாநாடு முடிவு செய்கிறது.

24 நாட்டின் சுயமரியாதையையும், பொருளாதாரத்தையும் கருதி ஒவ்வொருவரும் கதரை ஆதரிக்கவேண்டுமென்று இம் மகாநாடு வேண்டிக் கொள்கிறது.

25. பார்ப்பனரல்லாதார் பொருள் எத்துறைகளிலும் பார்ப்பனரல்லாதாரையே அடையுமாறு ஒவ்வொரு பார்ப்பனரல்லாதாரையும் செய்யும்படி இம்மகாநாடு வேண்டுகிறது.

26. சுயமரியாதைக்காக தமிழ்நாட்டில் செய்யப்படும் சத்தியாக்கிரகத்திற்கு இம் மகாநாடு முழு ஆதரவு கொடுக்கத் தயாராக விருக்கிறதாகத் தெரிகிறது.

27. கல்பாத்தி பார்ப்பனர்கள் வசிக்கும் பார்ப்பனச் சேரியில் வெகு காலமாய் தாழ்த்தப்பட்ட வகுப்பினர் நடக்கக் கூடாதென்று பார்ப்பனர்கள் செய்து வந்த கொடுமை நீங்கி எல்லாமக்களும் அவ்வீதி வழி நடக்கத் தகுந்த வெற்றி கிடைத்தமைக்கு இம்மகாநாடு சந்தோஷத்தை அறிவிக்கிறதுடன் அதுவே நமது சுயமரியாதை இயக்கத்திற்கு ஓர் வெற்றிக்குறியென்றும் கருதுகின்றது.

28. சென்னை பச்சையப்பன் கலாசாலை டிரஸ்டிகள் ஆதிதிராவிடர்களை இந்துக்கள் என்று ஒப்புக்கொண்டதோடு அவர்களையும் பள்ளியிற் சேர்த்துக் கொண்டமைக்கு இம் மகாநாடு மகிழ்கின்றது.

அதற்கு மாறாக நின்ற திரு. வெங்கடேச சாஸ்திரிலு என்ற பார்ப்பனரைக் கண்டிக்கிறதோடு அக்கூட்டத்தாரை இனி டிரஸ்டிகளாக நியமிக்கக் கூடாதென்றும் பொது ஜனங்களைக் கேட்டுக்கொள்ளுகிறது.

மேலும், சமுக ஒற்றுமையையும், நியாயத்தையும் கருதி, பச்சையப்பன் கலாசாலையில் கிறிஸ்துவமாணவர்களையும், மகமதிய மாணவர்களையும் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறது.

29. இம்மகா நாடு சென்னை மணவிவிடுதி சொந்தக்காரர்களை பார்ப்பனரல்லாதாருக்கு அதிகமான இடங்கள் கொடுக்குமாறு கேட்டுக் கொள்ளுகிறது.

30. திருவையாறு வடமொழிக் கலாசாலைக்காக தஞ்சை ஜில்லாபோர்டார் செலவுசெய்து வரும் தொகையில் ஒரு பகுதியை மீதிவைத்து ஆதிதிராவிடர்களின் பொதுக்கல்வி அபிவிருத்திக்காகச் செலவிட வேண்டுமென்று இம் மகாநாடு டை போர்டாரைக் கேட்டுக் கொள்கிறது.

31. ராயல் கமிஷன் என்பதை பகிஷ்காரம் செய்யவேண்டுமென்கிற அரசியல் கூட்டத்தாரில் நமது பார்ப்பனரல்லாதார் சேர்ந்து கொள்ளக் கூடாதென்று இம்மகாநாடு அபிப்பிராயப்படுகின்றது.

32. இன்று நிறைவேற்றப் பட்ட தீர்மானங்கள் அமுலுக்கு வர, சர்க்கார் சட்டசம்பந்தமாக ஆகவேண்டிய காரியங்களுக்கு நமது சட்டசபைப் பிரதிநிதிகள் வேண்டிய முயற்சி யெடுத்துக்கொண்டு அவைகளை நிறைவேற்றி வைக்க வேண்டுமாய் கேட்டுக் கொள்கின்றது.

---

## ஆராய்ச்சிக் கோவை.

குழந்தைகள் தூங்கும்போது தான் வளர்கின்றனவாம்.

* *

சாதாரண மனிதனின் இருதயம் 5 அங்குல நீளமும், 3½ அங்குல அகலமும், 2½ அங்குலப் பருமனுமுள்ளதாம்.

* *

பூச்சிகளில் 5 லட்சம் வித மிருக்கின்றனவாம். அவற்றில் 60 வகைப் பூச்சிகள் தான் நோய் பரப்புமாம்.

* *

ஒவ்வொரு தேன் கூட்டிலும் 20,000 முதல் 30,000 வரை தேனீக்கள் இருக்கின்றனவாம்.

* *

மெதுவான கம்பளத்தில் சிறு ஊசி விழுந்தால் சத்தம் எவ்வளவு நுண்ணியதா யிருக்கும்! அச் சத்தத்தையும் இடி முழக்கம்போலிருக்கச் செய்யும் அவ்வளவு நுட்பமான ஓசையுடையதாம் 'எலக்ட்ரான்' என்னும் பொருள். இப்பொருளின் ஓசையையும் கேட்கும்படியாக அமெரிக்காவில் இரு விஞ்ஞானர்கள் ஒரு கருவி கண்டு பிடித்திருக்கிறார்களாம்.

* *

வியன்னாவில் மைக்கேல் ரோஸ் போஹார் என்னும் எஞ்ஜினியர் ஆகாயப் பைஸைக்கிள் ஒன்று செய்திருக்கிறாராம். ஆகாயத்தில் 3000 அடி உயரம் வரையில் மணிக்கு 40 மைல் வேகத்தில் பறக்கலாமாம்.

* *

நிலக் கரியிலிருந்து மோட்டார் எண்ணெய் எடுக்க ஜெர்மனியில் ஓர் நூதன வழி கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது. 20 ராத்தல் கரியிலிருந்து 12 ராத்தல் எண்ணெய் எடுக்க முடியுமாம்.

Tamil Heritage Foundation International Digital Library EBook collection




பண்டிகை நெருங்கிவிட்டது!

பக்தித் தரியது! பாடல் நிறைந்தது!!

## "கிறிஸ்து பகவான்

### கிருபா கீர்த்தனம்".

இது மன்னுயிருக்காகத் தன்னுயிரை விடுத்த ஏசு பிரானைப் பாடி பஜனை செய்தற்கே அநேகரின் விருப்பத்தின்படி தியாகராஜர் தெலுங்கு தமிழ் மெட்டுகளில் பாடப் பெற்றது. பிரானின் திருவிளையாடல் யாவையும் ஒரு பாட்டிலமைத்திருக்கும் பான்மை வெகு சுவை யுள்ளது.

சொற்பக் காப்பிகளே கைவசம்!

உடனே ஒன்று வாங்கிப் பயன் பெறுங்கள்! தனிப் புஸ்தகம் ஒன்று அணா 4. மொத்த ஆர்டர் கொடுத்தால் சார்ஜ் லகுவாகும்.

விலாசம்:—

A. A. குமரகுருபரர்,

காயாமொழி, திருச்செந்தூர்.



## திருச்சியில் நாடார்களுக்கு நல்ல வசதி.

ஐயா!

திருச்சியில் சாப்பிடுவதற்கும், தங்குதவற்கும் தக்க வசதி இல்லை எனப் பலர் மனதினுறுத்திக் கொண்டிருந்த அவாவை நிறைவேற்ற உத்தேசித்து முன் சின்ன சவுக்குத் தெருவில் அமைத்து சில அசந்தர்ப்பங்களால் நிறுத்தியிருந்த சரஸ்வதி விலாஸ் நாடார் லாட்ஜை மறுபடியும் தக்க சமையல் ஆட்களைக் கொண்டு நவீன போஜன பதார்த்தவகைகளைத் தயாரித்து நம் நாடார் கனவான்களுடைய ஆதரவைப் பெற விரும்பி திருச்சி, பெரிய கடை பஜார், ஜாபர் சாய்பு தெருவில் மேற்கண்ட பெயருடன் சுக போஜன சாலை ஏற்படுத்தியிருக்கின்றேன். கனவான்கள் யாபேரும் நமது லாட்ஜிற்கு விஜயமாகி ஆத்ம திருப்தி செய்து ஆசீர்வதித்து அன்புடன் ஆதரிக்குமாறு வேண்டிக் கொள்ளுகிறேன்.

இங்ஙனம், தங்கள் வரவை எதிர்பார்க்கும்,

தங்களன்புள்ள,

A. N. குமாரசாமி நாடார்,

மானேஜிங் புரோப்ரைட்டர்.



## பாரதபுத்திரர்

## பாசுரபூஷணம்.

(சென்னை கவிராஜ் ஸ்ரீமான் ச. சு. சங்கரலிங்க நாடாரவர்களால் இயற்றப்பட்டது.)

இந்நூலாசிரியரின் வித்துவப் பெருமை நாம் விரித்துரைக்க வேண்டியதில்லை. பாடல்கள் அனைத்தும் சமுதம் போன்றவை. தேசாபிமானங்களைத் திரட்டி யூட்டுகின்றன. ஒவ்வொரு இந்தியருக்கும் அவசியம் கைவசமிருக்க வேண்டுமென்பது பகையாகா. இதில் இராமக்கிருஷ்ண பரமஹம்சர், சுவாமி விவேகானந்தர், சுவாமி சிரத்தானந்தர், இராமலிங்க சுவாமிகள் முதலிய வேதாந்த பக்தர்கள் மீதும், பாலகங்காதர திலகர், மகாத்மாகாந்தி லாலாலஜபதிராய், சுப்பிரமணிய சிவா முதலிய தேசபக்தர்கள் மீதும், தேசஊழியமே சிறந்ததெனச் செய்யும் சில பத்திராசிரியர்கள் மீதும், நமது நாட்டபிவிர்த்திக்குக் கைத்தொழில் பலம் பெறவும், கதர் கட்டுவதே சிலாக்கியமென்றும், மகாத்மா காந்தியவர்களின் உபதேசங்களை ஒன்று சேர்த்தும் பற்பல வர்ண மெட்டுகளில் நல்ல கீர்த்தனங்களாகப் பாடியமைத்திருக்கிறார். புஸ்தகம் ஒன்றுக்கு விலை அணா 5-தான். 1 டஜனுக்கு மேல் வாங்குபவர்களுக்கு 12½ கமிஷன் கொடுக்கப்படும், தபால் செலவு பிரத்தியேகம். வேண்டுவோர் கீழ்க்கண்ட விலாசத்திற் கெழுதவும்:—

மானேஜர்,

"நாடார் குல மித்திரன்" புத்தகசாலை,

நாடார் ஹைஸ்கூல் வீதி,

அருப்புக்கோட்டை.



## ஓர் தொழிலைக் கற்றாலென்ன?



"சோப் தொழில்" 9 படங்களுடன் ரூ 2

"தீக்குச்சித் தொழில்" 8 படங்களுடன் ரூ 2

கைத்தொழில் புத்தகங்களின்

கேட்லாக் இனும்!

ஆர்ட் புக்ஸ் கம்பெனி,

41/3 பிராட்வே, மதராஸ்.



நயமும், நாணயமும், உறுதியுமான கெட்டி

## "இரும்புப் பெட்டிகள்"

நமது தொழிற்சாலையில் கால், காலே அரைக்கால், அரை அங்குல கனம் புதிய தகட்டினுல் விசேஷ கள்ள அறைகளுடன் சீமைப பெட்டிகள் மாதிரியும், திண்டுக்கல் பெட்டிகள் மாதிரியும் கைதேர்ந்த வேலைக்காரர்களைக் கொண்டு தயாரிக்கப்படுகின்றன. ஆகையால் இதர பெட்டிகளைவிட நமது பெட்டிகள் எல்லா வகையிலும் மேலானவை, சுத்தமானவை, கெட்டியானவை என்று வாடிக்கைக்காரர்களால் புகழப்படுகின்றன. எங்கள் பெட்டிகளை ஒரு முறை பரீக்ஷித்துப் பாருங்கள். விபரம் எங்களுக்கு எழுதிக் கேளுங்கள்.

"தொழிற் சாலை"
1. கப்பல் போலுசெட்டி வீதி,
வண்ணாரப்பேட்டை,
மதராஸ.

எஸ். பி. குமார நாடார் அன்சன்ஸ்,

வண்ணாரப்பேட்டை,

மதராஸ.

"வியாபார ஸ்தலம்"
1/33. ஆதியப்ப நாயக்கன் தெரு,
சௌகாரப்பேட்டை,
மதராஸ்.

விலைகளை இப்பொழுது மிகுதியும் குறைத்திருக்கிறோம்.



இனும் ரூபாய் 100! இதில் குணமில்லையென்று நிரூபிப்பவர்களுக்கு.

## ஸ்ரீ கிருஷ்ணா டெண்ட்டல் பாம்.

மைசூர் கவர்ன்மெண்டாராலும், நியூயார்க், லண்டன், டோக்கியோ, பெர்லின், பாரிஸ், அகமதாபாத் முதலியதேசங்களின் இன்ட்டர்நேஷனல் சொஸைட்டியாராலும் பரிசீலனை செய்யப்பட்டு நற்சாக்ஷிப்பத்திரம் பெற்றது. தந்த வியாதிகளைப்போக்கி பற்களை உறுதியாக்கும் பற்பொடி. பாட்டில் 1-க்கு ரூ 0—4—0. டஜன் 1-க்கு ரூ 2—4—0. குரோஸ் 1-க்கு ரூ 24—0—0. பாக்கிங் & தபால் சார்ஜ் பிரத்தியேகம். அஞ்சல் பார்சல் தபால சார்ஜ் உள்பட ஆர்டருடன் முன்பணம் அனுப்பவேண்டும்.

ஸ்ரீகிருஷ்ணா & கோ, மன்னார்குடி. S I Ry.


கு. ஆ. ரத்த நாடாரால் அருப்புக்கோட்டை ஸ்ரீ முத்துமாரியம்மன் பிரஸில் அச்சியற்றி வெளியிடப்படுகிறது.